# இலக்கு

இதழ் 66

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

பெப்ரவரி 23, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1




## வாக்குறுதியைக் கொடுத்து விட்டு அங்கீகாரம் கிடைத்த பின்னர் அதை தூக்கியெறிந்து செயற்பட மாட்டோம்

- கஜேந்திரகுமார் பொன்னம்பலம்-

## கல்வி அடைவில் ஊக்கமளித்தலின் இன்றியமையாமை
## தமிழ் சமூகம் எங்கு நிற்கிறது

மோஜிதா



## தொல்லியல் திணைக்களத்தினால் தொலைந்து போகும் நிலையில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம்

கோ- ரூபகாந்


## இந்திய மத்திய அரசை
## இக்கட்டான நிலைக்கு தள்ளும்
## குடியுரிமை திருத்தச் சட்ட போராட்டங்கள்

கல்யாணி



## உலக மைய நீரோட்ட ஊடகங்களை புரிதல்

மாலதி




தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

# அமெரிக்காவின் உடன்பாடு
## இந்தியாவின் பாதுகாப்புக்கு ஆபத்து



அமெரிக்காவின் மிலேனியம் சலஞ்ச் உடன்பாடு இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது என கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆசியாவில் படைப் பரம்பலை ஏற்படுத்துவதே அமெரிக்காவின் மிலேனியம் சலஞ்ச் திட்டத்தின் நோக்கம். திருமலைத் துறைமுகம், கொழும்புத் துறைமுகம் என்பன இதன் பிரதான நோக்கமாக இருக்கின்றது. எனினும் இந்த துறைமுகங்கள் அமெரிக்காவின் கடற்படை கப்பல்களின் நடவடிக்கைகளுக்கு போதுமானது அல்ல.

எனவே இரு துறைமுகங்களையும் சுற்றியுள்ள நிலங்களை கைப்பற்றி துறைமுகங்களை விரிவுபடுத்துவது. அதன் பின்னர் இரு துறைமுகங்களையும் இணைக்கும் விரைவு நெடுஞ்சாலையை அமைப்பதே அமெரிக்கா உடன்பாட்டின் பிரதான நோக்கம்.

நிலங்களை கையகப்படுத்தும் திட்டத்திற்கு ஏதுவாக அமெரிக்க அரசு இரு துறைமுகங்களுக்கும் அண்மையாக உள்ள நிலங்கள் தொடர்பில் தகவல்களை சேகரித்து வருகின்றது. ஏழு மாவட்டங்களை இணைத்து தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள அமெரிக்கா திட்டமிட்டுள்ளது.

அதாவது அமெரிக்காவின் உடன்பாடு கைச்சாத்திடப்பட்டால், சிறீலங்காவின் வளங்கள் அனைத்தும் அமெரிக்கா வசம் சென்று விடும் என சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது. அதாவது சீனாவின் பிரசன்னத்தை ஆசியப் பிராந்தியத்தில் முறியடிப்பதே அமெரிக்காவின் திட்டம் என அது மேலும் தெரிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்காவின் உடன்பாடானது, இந்தியாவுக்கு மிகப்பெரும் ஆபத்தானது என படைத்துறை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். சிறீலங்காவில் அமெரிக்கப் படையினர் நிலை கொண்டால், அது இந்தியாவிற்கு தொட்டு விடும் தூரத்தில் இருக்கும் ஆபத்தாகும். இது இந்தியாவிற்கு நேரிடையான ஆபத்தை ஏற்படுத்தும்.

சீனா, இந்தியா, ஈரான் என அமெரிக்கா தனது எதிரிகளை வரிசைப்படுத்த இந்த உடன்பாடு உதவும் என அவர்கள் தெரிவித்துள்ளனர். சீனாவின் சக்தி வாய்ந்த மையமாக சிறீலங்கா மாற்றம் பெற்றதே தற்போதைய நெருக்கடிகளுக்கு காரணம் என தெரிவிக் கப்படுகின்றது.

# கொரோனா வைரஸ்
## முடங்கியது சுற்றுலாப் பயணிகள் கப்பல் சேவை



சீனாவில் பரவிவரும் கொரோனா வைரஸின் தாக்கத்திற்கு இதுவரையில் 2,239பேர் பலியாகியுள்ளதாகவும், 75,569பேர் பாதிப்படைந்துள்ளதாகவும் ஐ.நாவின் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதனிடையே, உலகின் 45 பில்லியன் டொலர்கள் வருமானத்தை ஈட்டும் சுற்றுலாப் பயணிகளின் சொகுசுக் கப்பல் சேவை முடக்கத்துக்கு வரும் நிலையை அடைந்துள்ளதானது பல நாடுகளின் பொருளாதாரத்தை பாதித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

3700 பயணிகளுடன் யப்பானின் கடற்கரையில் நிறுத்தப்பட்டுள்ள சுற்றுலாப் பயணிகள் கப்பலில் உள்ள 540 பயணிகளில் கொரோனா வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகள் தென்படுவதாக உறுதிப்படுத்தப்பட்டதானது இந்த தொழில்துறையை அதிகம் பாதித்துள்ளது.

வெஸ்ரடாம் என்ற மேலும் ஒரு கப்பல் கம்போடியா கடற் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. கார்னிவேல் நிறுவனத்தின் இரு கப்பல்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள போதும், இந்த செய்தி சுற்றுலாப் பயணிகளிடம் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதால், 45 பில்லியன் டொலர்களை வருமானமாகக் கொண்ட இந்த தொழில் முற்றாக முடங்கும் நிலைக்கு வந்துள்ளது.

50இற்கும் மேற்பட்ட பயணிகள் கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளன. 7 துறைமுகங்கள் மூடப்பட்டுள்ளன. பல ஆயிரக்கணக்கான பயணிகள் பயணத்தை கைவிட்டுள்ளதுடன், பலர் பாதிப்படைந்துள்ளனர்.

கரீபியன், நோர்வேஜியன் கப்பல் நிறுவனங்களின் பங்குகள் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளன. 10 தொடக்கம் 16 விகிதம் வீழ்ச்சி கண்டுள்ளன. வைரஸின் தாக்கம் இத்துடன் முடிந்து விட்டால் நாம் தப்புவோம், அது ஆசியாவை கடந்து விட்டால் நிலமை மாறிவிடும் என சுற்றுலாப் பயணிகள் கப்பல்துறை ஆய்வாளர் அலெக்ஸ் பிரிங்நால் தெரிவித்துள்ளார்.

இந்த தொழில்துறையானது தற்போது ஆசியாவிலேயே வளர்ந்து வருகின்றது. 4.2 மில்லியன் பயணிகள் 2018 ஆம் ஆண்டு பயணம் செய்துள்ளனர். 2017ஆம் ஆண்டை விட இது 1.2 மில்லியன் அதிகமாகும்.

2018ஆம் ஆண்டு சீன பயணிகள் 277 பில்லியன் டொலர்களை செலவிட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் உலக வர்த்தக நிறுவனம் தெரிவித்துள்ளது. இது ஏனைய நாட்டு பயணிகளுடன் ஒப்பிடும் போது மிக மிக அதிகமாகும்.

# ஏப்பிரல் 25 சிறிலங்காவில்
## பொதுத்தேர்தல்



மார்ச் மாதம் 2ஆம் நாள் நள்ளிரவில் சிறீ லங்கா நாடாளுமன்றத்தை அரச தலைவர் கோத்தபாயா ராஜபக்சகலைக்கவுள்ளதாகவும், ஏப்பிரல்25ஆம் நாள் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது.

மார்ச் 12ஆம் நாளில் இருந்து 19ஆம் நாள் வரையிலும் வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்கான காலஎல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தென்னிலங்கையில் தேர்தலை சந்திப்பதற்கு இரு பெரும் சிங்களக் கட்சிகளும் தயாராகி வருகையில், தமிழ் கட்சிகள் பல பிளவுகளைச் சந்தித்துள்ளது தமிழ் மக்களுக்கு பலத்த பின்னடைவை ஏற்படுத்தலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, கடந்த வருடம் இடம்பெற்ற அரச தலைவர் தேர்தல் செலவுகளின் மிகுதிப் பணமான ஒரு பில்லியன் ரூபாய்களை அரசு தமக்கு தரவேண்டும் என சிறீலங்கா தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. பொதுத்தேர்தல் செலவுகள் 6 பில்லியன் ரூபாய்கள் என அது மேலும் தெரிவித்துள்ளது.

# ஐ.நா தீர்மானத்தில் இருந்து
## சிறீலங்கா வெளியேற்றம்



ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பு நிறைவேற்றிய தீர்மானங்களில் இருந்து சிறீலங்கா வெளியேறுவதாக சிறீலங்கா வெளிவிவகாரச் செயலாளர் ரவிநாத் ஆரியசிங்கா ஐ.நா மனித உரிமைகள் அமைப்பின் தலைவர் எலிசபத் ரிச்சி பிலஸ்பேகரிடம் தெரிவித்துள்ளார்.

2019ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 40/1 தீர்மானத்தில் இருந்து சிறீலங்கா அரசு வெளியேறவுள்ளதாகவும், இந்த வெளியேற்றத்தின் மூலம் 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 30/1 மற்றும் 2017ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட 34/1 ஆகிய தீர்மானங்களில் இருந்து சிறீலங்கா வெளியேறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானங்களை நிறைவேற்றுவதில் முனைப்பாக செயற்பட்ட இணைத் தலைமைக் குழு நாடுகளான பிரித்தானியா, கனடா மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு நாம் இது தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளதாக சிறீலங்கா தெரிவித்துள்ளது.

# காணாமல் போனவர்களின் உறவுகளை படையினர் கண்காணிக்கின்றனர் - மனித உரிமைகள் கண்காணிப்பகம்

HUMAN RIGHTS WATCH

சிறீலங்கா அரசினாலும் அதன் படையினராலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை சிறீலங்கா படையினர் அதிகளவில் கண்காணித்து வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சிறீலங்கா படையினரும், புலனாய்வுப் பிரிவினரும், வலிந்து காணாமாமல் போனவர்களின் உறவுகளையும், அவர்களுக்கு ஆதரவு வழங்குபவர்களையும் அவர்கள் மேற்கொண்டு வரும் போராட்டங்களையும் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும், சிறீலங்காவின் அரச தலைவராக கேத்தபாயா ராஜபக்ச பதவியேற்ற பின்னரே இவ்வாறான நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாகவும் அது தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது.

## சிறீலங்காவில் மனித உரிமை வன்முறைகள் மீளவும் மீளும் நிலையென ஐ.நா அறிக்கை எச்சரிப்பு

பெப்ருவரி மாதம் 24ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்தின் 46ஆவது அமர்வில் விவாதத்திற்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ள, ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமை ஆணையகத்தின் ஆணையாளரின், சிறீலங்காவில் புனர்வாழ்வு, பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் என்பனவற்றை முன்னேற்றுதல் தொடர்பான 2020ஆம் ஆண்டு ஆய்வு அறிக்கை சிறீலங்காவுக்கு மனித உரிமைகள் ஆணையகத்தில் சமர்ப்பிப்பதற்கு முன் சிறீலங்காவின் பதில் அளிப்பினையும் சேர்ப்பதற்காக அனுப்பியமைக்கு, தாங்கள் தகவல்களை வழங்க விரும்பவில்லை என பெப்ருவரி மாதம் 5ஆம் திகதி சிறீலங்காவின் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தரப் பிரதிநிதியின் வாய்மொழி வாயிலாக சிறீலங்கா தெரிவித்திருந்தது.

தற்பொழுது 2015இல் 47 நாடுகளால் கொண்டு வரப்பட்டுச் சிறீலங்காவும் தான் அதனை அனுசரிப்பதாகக் கையெழுத்திட்ட மனித உரிமைகள் ஆணையகத்தின் 30/1ஆம் இலக்கத் தீர்மான மான சிறீலங்காவில் புனர்வாழ்வு, பொறுப்புக் கூறல் மனித உரிமைகள் என்பனவற்றை முன்னேற்றுதல் தொடர்பான தீர்மானத்தில் இருந்து விலகுவதற்கான தனது தீர்மானத்தை சிறீலங்கா முன் வைத்துள்ளது.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகத்தின் ஆணையாளரால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தில் சிறீலங்காவின் விளக்கப் பதிலின்றி முன்வைக்கப்படவுள்ள திருத்தங்கள் செய்யப்படாத 18.02.2020 திகதியிட்ட AH RC_ 43_19 ஆம் இலக்க முன் அறிக்கையில் அதன் சாராம்சத் தொகுப்பிலும், 7ஆவது பிரிவிலும், 36ஆவது பிரிவான முடிபுகள் என்னும் பிரிவிலும் “30/1ஆம் இலக்கத் தீர்மானத்திற்கு அமைவாகச் சிறீலங்கா சில முன்னேற்றங்களை ஏற்படுத்தினாலும் சிறீலங்கா அரசாங்கம் தண்டனைகளை வழங்குவதிலும், தனது நிறுவனங்களைச் சீர்திருத்தி அமைப்பதிலும் காட்டி வரும் இயலாமையினால் மனிதஉரிமை வன்முறைகள் மீளவும் ஏற்படக்கூடிய நிலை உள்ளது”, என எச்சரித்துள்ளது.

30/1ம் இலக்கத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவது எல்லா மக்களதும் ஆர்வமாக உள்ள அமைதியான சமூகத்தையும், மாற்று வளர்ச்சிகளையும், அடைவதற்கு அவசியமானதாக உள்ளதென இவ் அறிக்கை மீள்வலியுறுத்தி உள்ளது. அத்துடன் அறிக்கையின் சாராம்சத்தில் “மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சிறீலங்காவின் மனித உரிமை முன்னேற்றங்கள் குறித்துத் தக்க மேற்பார்வைகளையும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் தொடர்புகளையும் மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி உள்ளது”.

அத்துடன் அறிக்கையின் 7ஆவது பிரிவில், “புனர்வாழ்வு, பொறுப்புக்கூறல், மனிதஉரிமைகள் என்பனவற்றை முன்னேற்றுவதற்குப் பின்னடைவுகளை ஏற்படுத்தியதன் மூலம் சிறீலங்கா அரசாங்கம் குடிமைச் சமுதாய வெளியைச் சுருக்கி அதனை உருவாவதற்கான வெளியையும் அதனை உருவாக்குவதற்காக நிறுவப்பட்ட முக்கிய பாதுகாப்புக் கவசங்களையும் இல்லாதொழித்து உள்ளது.” என வெளிப்படையாக எடுத்துரைத்துள்ளது.

அறிக்கையின் சாராம்சத்தில் “மனித உரிமைகள் ஆணைக்குழுவை சிறீலங்காவின் மனித உரிமை முன்னேற்றங்கள் குறித்து தக்க மேற்பார்வைகளையும் மனித உரிமைகளை உறுதிப்படுத்தும் தொடர்புகளையும் மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி உள்ளது”.

அறிக்கையில் 18ஆவது பிரிவு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக அவர்களுடைய உறவினர்களுக்குத் தகவல்கள் அளித்தல், புனர்வாழ்வு அளித்தலுக்கு 30/1 தீர்மான வழிகாட்டல்களுக்கு மாறுபட்ட முறையில் அரச அதிபரின் அலுவலகம் காணாமலாக்கப்பட்டோரை இறந்தவர்ககளாக மரணச் சான்றிதழ் கொடுத்து அவர்களின் உறவினர்களுக்குப் புனர்வாழ்வு அளித்தல் என்னும் அறிவிப்பை வெளியிட்டமையைச் சுட்டிக்காட்டியுள்ளது. 19ஆவது பிரிவில் இவ்விடயத்தைத் விரைவுபடுத்தும் நிர்வாக முறைமைகளாலோ புனர்வாழ்வு அளிப்பதனாலோ முடிவுக்குக் கொண்டு வர இயலாது எனவும் எந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான கொள்கைகளும் நாட்டில் எக்காலத்திலேனும் நடைபெற்ற வலிந்து காணாமலாக்கப்பட்டோர் முழுப்பேரையும் உள்ளடக்கியதாக மேற்கொள்ளப்படல் வேண்டும் எனவும், உருவாக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கபட்டோர் அலுவலகத்தின் பெறுமதிவாய்ந்த தரவுகள் பேணப்படுவதை உறுதி செய்தல் அவசியம் எனவும், அதன் அடிப்படையில் நீதி வழங்கப்படலும், உருவாக்கப்பட்ட புனர்வாழ்வு அலுவலகத்தின் அடிப்படையில் புனர்வாழ்வு அளித்தலும் நடைபெறுவதை உறுதி செய்யுமாறும் அறிவுறுத்தியுள்ளது.

அறிக்கையின் 25ஆவது பிரிவு இன்றைய அரசாங்கத்தின் சிறீலங்கா அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்திற்கு ஏற்ப அரசியல் அதிகார பரவலாக்கத்தைக் கூட மறுப்பதைச் சுட்டிக் காட்டியுள்ளது. 26ஆவது பிரிவு முன்னைய வருடங்களில் சுதந்திர தினத்தன்று இருமொழிகளில் தேசிய கீதம் பாடப்பட்டமை புனர்வாழ்வினை ஏற்படுத்துவதற்கான குறியீடாகத் திகழ்ந்ததெனவும் ஆனால் இவ்வாண்டு சிங்களத்தில் மட்டும் பாடுமாறு புதிய அரசாங்கம் செய்துள்ளது எனவும் எடுத்து விளக்கியுள்ளது.

இவ்வாறு இவ் அறிக்கை சிறீலங்கா அரசாங்கம் இன்று தமிழர்களுக்குச் செய்யும் மனித உரிமை மீறல்கள், சனநாயக பங்களிப்பு மறுப்பு, நல்லாட்சியை அளிக்காது விடுதல் என்பன குறித்த பல தெளிவான உண்மைகளின் வெளிப்பாடாக உள்ளது.

இந்த ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளரின் சிறீலங்கா குறித்த அறிக்கையை உலக மக்கள் முன்னும் உலக நாடுகளிடமும், அனைத்துலக அமைப்புக்களிடமும் காலத்தை வீணடிக்காது வீண் கதைகள் பேசி இழுத்தடிப்புக்களையும் திசை திருப்பல்களையும் செய்யாது, உலகின் முக்கியமான பலநாடுகளில் அவற்றின் இனத்துவச் சிறுபான்மைக் குடிகளாக உள்ள புலம்பெயர் ஈழத் தமிழர்கள் ஒன்றுபட்டு எடுத்து விளக்க வேண்டும்.

இதன் மூலம் ஈழத்தில் மனித உரிமைக்காகவும் நீதிக்காகவும் புனர்வாழ்வுக்காகவும் நாளாந்தம் தவித்து இனங்காணக் கூடிய அச்சத்துடன் வாழும் அவர்களின் நிலையை உலக நாடுகளும் அமைப்புக்களும் மாற்றச் செய்ய வேண்டும்.

அதே நேரத்தில் ஈழத்தில் இலங்கைத் தமிழர்களைத் தங்கள் குடிகளாகச் சிறீலங்கா திரும்பத் திரும்பத் ஏற்க மறுத்து அவர்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையைத் தொடர்ந்து வன்முறைப்படுத்தி வருவதையும் இவ்அறிக்கையின் அடிப்படையில் உலகுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இதனால் ஈழத்தமிழ் மக்கள் தங்களின் வெளியக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தங்கள் சொந்தத் தாயகத்தில் அந்தத் தாயகத்தின் ஈழத்தமிழ்தேசிய இனமாக, யாராலும் பிரிக்க இயலாத அவர்களின் தன்னாட்சி கொண்டு, வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் வாழ்ந்து வரும் அவர்களின் அரசியல் எதிர்காலத்தை அவர்களே நிர்ணயித்து, அவர்களின் மனித உரிமைகளையும், அவர்களின் சனநாயகப் பங்களிப்புக்களையும், அவர்களின் நல்லாட்சியையும் பாதுகாப்பான அமைதியையும் அனைத்துலகச் சட்டங்களுக்கு ஏற்ப சனநாயக முறையில் உறுதிப்படுத்திக் கொள்ள அனைத்து முயற்சிகளையும் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் விரைந்து செய்வதற்கான ஒரு காலமாக இக்காலம் தோற்றம் பெற்றுள்ளது.

***- ஆசிரியர்***

## வடக்கு கிழக்கில் குடிசார் அரசாங்கச் செயற்பாடுகளை இராணுவமயமாக்கல் மூலம் சிறீலங்கா அரசு தடை செய்கிறது

**- ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர்**



**குடிமக்களுக்குரிய முக்கிய திணைக்களங்கள் அண்மையில் பாதுகாப்பு அமைச்சின் கண் காணிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன எனவும் அறிவிப்பு**

*பெப்ருவரி மாதம் 24ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 20ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் ஆணையகத்தின் 46ஆவது அமர்வில் விவாதத்திற்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ள, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையகத்தின் ஆணையாளரின், சிறீலங்காவில் புனர்வாழ்வு, பொறுப்புக் கூறல் மனித உரிமைகள் என்பனவற்றை முன்னேற்றுதல் தொடர்பான 2020ஆம் ஆண்டு ஆய்வு அறிக்கையின் 33வது பிரிவு பின்வருமாறு அமைகிறது:- “ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 30/1 தீர்மானம், அரசாங்கம் செயற்பயன்பாடு உள்ள சீர்திருத்தங்களை பாதுகாப்புப் பிரிவில் ஏற்படுத்த வேண்டுமென ஊக்கப்படுத்தியது. வடக்கு கிழக்கில் தொடர்ந்தும் 2019இலும் இராணுவம் இடம்பெற்றுள்ள நிலங்களின் பெரும்பாலானவை திருப்பிக் கொடுக்கப்பட்டன. ஆயினும் அங்கு செயற்பட்டு வரும் மக்களின் குடிசார் அரசாங்கச் செயற்பாட்டை இராணுவ மயமாக்கல் மூலம் தடைசெய்து வரும் போக்குத் தொடர்கிறது.*

**குடிமக்களுக்குரிய முக்கிய திணைக்களங்களான**

- *பொலிஸ்*
- *குடிவரவு திணைக்களம்*
- *தொலைத்தொடர்புப் பதிவகம்*
- *தேசிய ஊடகங்கள் மையம்*
- *அரசசார்பற்ற நிறுவனங்களின் செயலகம்*

*ஆகியன அண்மையில் பாதுகாப்பு அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன.*

*அத்துடன், அறிக்கையின் 34ஆவது பிரிவு பின்வருனவற்றைப் பதிவு செய்துள்ளது :- சித்திரவதைகளுக்கும், வலிந்து காணாமல் செய்யப்படலுக்கும் நீதிக்குப் புறம்பான கொலைகளுக்கும் பொறுப்பாக இருந்த தனிப்பட்டவர்களை சிறீலங்கா விலக்கி அந்தக் கட்டமைப்புக்களை நிலைகுலைக்காது, அத்தகைய செயல்கள் திரும்பத் திரும்ப நடைபெறுவதை முன்தடுக்க இயலாமல் செய்து வருகிறது. உயர் ஆணையாளர், அனைத்துலக மனித உரிமைகள் சட்டங்களுக்கும், அனைத்துலக யுத்தத்தின் போதான மனிதாயச் சட்டங்களுக்கும் எதிராகச் செயற்பட்ட படையினர்க்குக் கட்டளைகள் வழங்கித் தலைமையினராக இருந்தவர்கள் என, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தால் சிறீலங்காவின் பொறுப்புக் கூறலைக் கண்டறிய நியமிக்கப்பட்ட துறைசார் நிபுணர்கள் குழுவாலும், சிறிலங்கா மீதான மனித உரிமைகள் ஆணையகத்தின் சிறிலங்காவில் மனித உரிமைகள் தொடர்பான புலன் விசாரணைகளை மேற்கொண்ட குழுவாலும், ஆவணப் படுத்தப்பட்டவர்களுக்குச் சிறீலங்காவில், அரச அதிபர் தேர்தலுக்கு முன்னரும் தேர்தலுக்குப்*

**தொடர்ச்சி 11ம் பக்கம்**

# வாக்குறுதியைக் கொடுத்து விட்டு அங்கீகாரம் கிடைத்த பின்னர் அதை தூக்கியெறிந்து செயற்பட மாட்டோம்



-கஜேந்திரகுமார் பொன்னம்பலம்-

**நாங்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்து விட்டு அங்கீகாரம் கிடைத்த பின்னர் அதை தூக்கியெறிந்து செயற்பட மாட்டோம். நாங்கள் ஒன்றை சொல்கின்றோம் என்றால், செயலிலும் அதையே செய்வோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்முடனான நேர்காணலில் தெரிவித்தார்.**



**திரு சி.வி.விக்னேஸ்வரனின் புதிய கட்சி தொடர்பாகவும், எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாகவும் இலக்கு இணையத்திற்கு அவர் வழங்கிய சிறப்பு நேர்காணலை இங்கு தருகிறோம்.**

**கேள்வி:**

**புதிய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு அரசியல் சூழ்நிலையில் எவ்வாறான மாற்றங்கள் நிகழ்ந்துள்ளது?**

**பதில்:**

இலங்கைத் தீவிற்குள்ளே எங்களுக்கு ஒரு கடும் நெருக்கடி உள்ளது என நினைக்கின்றேன். இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்ற கோணத்தில் தான் எதையும் செய்யத் தயாரில்லை என்று கோத்தபாயா ராஜபக்ஸ கூறியிருக்கின்றார். 30 வருடங்களில் வடகிழக்கில் அபிவிருத்தி பெருமளவில் நடக்கவில்லை என்றும், அதற்கு முன்னுரிமை கொடுப்பதற்கு தான் தயார் என்ற கோணத்திலேயே அவரின் கருத்து அமைந்திருக்கின்றது.

மகிந்த ராஜபக்ஸ ஆட்சியிலிருந்த 10 வருடங்களில், விடுதலைப் புலிகளை இல்லாது ஒழிப்பதற்காக தமிழர்களுக்கு தான் தீர்வைக் கொடுப்பதற்கு தயார் என்று கூறியிருந்தார். ஆனால் இன்று அவரின் சகோதரர் ஆட்சிக்கு வந்ததையடுத்து அதை முற்று முழுதாக நிராகரித்திருக்கின்றார். 13ஆம் திருத்தச் சட்டத்தைக்கூட இந்தியா சென்று அவர் நிராகரித்துள்ளார். தீவிற்குள்ளே என்று பார்க்கும் போது தமிழர்களுக்கு மிகவும் மோசமான ஒரு நிலைமை என்று தான் கூற வேண்டும். தமிழர்களுக்கு மட்டுமல்ல, சிங்கள பௌத்த மக்களைத் தவிர்ந்த அனைவருக்கும் ஒரு கடும் சவாலான ஒரு நிலைமை என்று தான் நான் கூறுவேன்.

ஈழத் தமிழர் பிரச்சினை என்பது வெறும் இலங்கைத் தீவை மையப்படுதுத்திய பிரச்சினை அல்ல. இன்று அது சர்வதேசமயப்படுத்தப்பட்டு, இன்று பெரிய வல்லரசுகள் இந்தப் பிரச்சினையைப் பயன்படுத்தி மோதுகின்ற நிலைமை உள்ளது. கோத்தபாயா ராஜபக்ஸ இந்தியாவிற்கு சென்று 13ஆவது திருத்தத்தை தான் ஏற்க முடியாது என்ற கோணத்தில் ஜனாதிபதியும், பிரதமரும் கூறியுள்ளதானது, ஒரு பாரிய விளைவை ஏற்படுத்தும் என்பதே எங்களின் கருத்து.

**கேள்வி:**

**கடந்த வாரம் முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் தலைமையில் மாற்று அணி ஒன்று உருவாக்கப்பட்டது. அதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக உங்களின் நிலைப்பாடு எப்படியிருக்கின்றது?**

பதில்:

விக்னேஸ்வரன் இந்தியாவின் இன்னொரு கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எப் இன் உறுப்பினராகத் தான் இருக்கின்றார். மாற்று அணியில் ஈ.பி.ஆர்.எல்.எப் இன் புதிய தலைவராகத்தான் அவர் இயங்குகின்றார். இந்தியா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பயன்படுத்தி 10 வருடங்களாக மேற்கொள்ளவிருந்த அரசியல் முயற்சி இன்று தோல்வியடைந்துள்ளது. அதுதான் யதார்த்தம். ஏனெனில் கூட்டமைப்பை இன்று தமிழர்கள் நிராகரிக்கத் தொடங்கியுள்ளார்கள். மாற்று அணிகள் என கடந்த 10 வருடங்களாக நாங்கள் மட்டும் தான் இயங்கிக் கொண்டு வருகின்றோம். 2010ஆம் ஆண்டு தேர்தல் காலத்திலிருந்தே நாங்கள் தமிழ்க் கூட்டமைப்பின் பிழைகளை சுட்டிக்காட்டிக் கொண்டு வருகின்றோம்.

கூட்டமைப்பிற்கு எதிராக நாங்கள் வைத்த அனைத்து விமர்சனங்களும் இன்று நிரூபிக்கப்பட்டுள்ளன. ஆகவே மக்கள் கட்டாயம் எங்களின் பக்கம் திரும்பவுள்ளார்கள் என்ற ஒரு நிலைமை வரும் போது, அந்த மாற்றம் எங்கள் கைகளுக்கு வரக்கூடாது என்பதற்காக, வல்லரசுகளுக்கு தாங்கள் விரும்பியபடி செயலாற்றக்கூடிய ஒரு அமைப்பு தேவைப்படுகின்றது. ஆனால் நாங்கள் சுயமாக இயங்கும் ஒரு அமைப்பு. புதிய தலைமைத்துவத்தை நாங்கள் ஏற்படுத்தக் கூடாது என்ற எண்ணத்தில் விக்னேஸ்வரனையும், ஈ.பி. ஆர்.எல்.எப் கட்சியையும் பயன்படுத்தி மேற்கொண்டுள்ளனர்.

**கேள்வி:**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைக் குலைத்தது மற்றும் தமிழ் மக்கள் பேரவையை நிலைகுலையச் செய்தது நீங்கள் தான் என சி.வி.விக்னேஸ்வரன் ஐயா கடுமையாக சாடியுள்ளார். இது தொடர்பாக உங்களின் கருத்து என்ன?**

**பதில்:**

தானே கேள்வி எழுதி, தானே பதில் சொல்பவர் விக்னேஸ்வரன். இன்று பத்திரிகைகளில் வந்துள்ளது. நான் இதைப் பெரிதுபடுத்தவில்லை. ஆனால் எங்களின் அமைப்பில் இதற்கு ஒரு பதில் கட்டாயம் வழங்கப்படும். 2010ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமையைக் குழப்பினோம் என்றால், இன்று அவர் என்ன செய்கின்றார்? அன்று நாங்கள் செய்ததை பிழை என்று கூறுபவர். இன்று தான் என்ன செய்கின்றார். இன்று அவருடன் இருக்கும் அனைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்றவர்களே.

நாங்கள் 2010இல் வகித்த பதவிகளை புறக்கணித்து, கூட்டமைப்பினர் செய்த பிழைகளை சுட்டிக்காட்டினால், இந்த இனத்திற்கு ஒரு புதிய தலைமைத்துவம் தேவை. தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழர்களின் நலன்களை கைவிட்டு ஏனைய வல்லரசுகளின் சொற்படி செயற்படப் போகின்றார்கள் என்பதையே அன்றும் சொன்னோம். இன்றும் சொல்கின்றோம். அது இன்று நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

விக்னேஸ்வரன் 10 வருடங்களில் 5 வருடங்கள் கூட்டமைப்பிற்குள்ளே தனது பதவியை அனுபவித்த பின்னர் வெளியில் வந்து பதவி போன அடுத்த நாள் புதிய கட்சியை தொடங்கியவர். அவரும் கூட்டமைப்பிற்கு மாற்றாகத் தான் செயற்படுகின்றார். நான் கூட்டமைப்பிலிருந்து வெளியே வந்தது பிழை என்று சொல்பவர் தானும் அதையே செய்திருக்கின்றார்.

தமிழ் மக்கள் பேரவையைப் பொறுத்தவரையில், நாங்கள் இன்றும் தமிழ் மக்கள் பேரவையில் உறுப்பினராக இருக்கின்றோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொள்கை ரீதியாக பிழை விடுகின்றது என்பதை காரணம் காட்டியே தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை தீர்விற்கான யோசனைகளை ஒற்றையாட்சிக்குள்ளே கொண்டு சென்று முடக்கப் போகின்றார்கள் என்பதனால், தமிழ் மக்களுக்கு ஓர் நிரந்தரத் தீர்வு தேவை என்பதால், அந்தத் தீர்வுத் திட்டத்தை உருவாக்கவே தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டது. தமிழ் மக்கள் பேரவை உருவாக்கப்பட்டதன் பின்னர் எடுக்கப்பட்ட முதலாவது பணி தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான ஒரு சரியான தீர்வுத் திட்டத்தை தயாரித்து வழங்குவதே .

தமிழ் மக்களின் அபிலாசைகளை தீர்க்கக்கூடிய வகையிலேயே அந்த தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. இந்த தீர்வுத்திட்டம் தயாரிப்பதற்கான குழுவிற்கு விக்னேஸ்வரன் எவரையும் நியமிக்கவில்லை. நாங்கள் தான் நியமித்தோம். அதில் ஈ.பி.ஆர்.எல்.எப், புளொட் போன்றவர்கள் உறுப்பினர்களை நியமித்தனர். ஆனால் விக்னேஸ்வரன் ஒருவரையும் நியமிக்கவில்லை. அந்த தீர்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டதன் பின்னர் ஜனவரி 30ஆம் திகதி நாங்கள் அதனை வெளியிட்டோம். 29 ஆம் திகதி இரவு பேரவையின் இணைத் தலைவர் வைத்திய கலாநிதி லக்ஸ்மன் தொடர்பு கொண்டு விக்னேஸ்வரனுக்கு தயாரிக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தில் சிறிய பிரச்சினை இருப்பதாகக் கூறி அதை மாற்ற வேண்டும் என கேட்கவுள்ளார் என்று கூறினார். தீர்வுத் திட்டம் வெளியிடுவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு, வீரசிங்கம் மண்டபமும் ஒழுங்கு செய்யப்பட்டு விட்டது.

இந்த திட்ட வரைபில் ஒருசில திருத்தங்களை நான் செய்திருக்கின்றேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விரும்பியதற்கேற்ப நான் திருத்தங்களை மேற்கொண்டிருப்பதாக விக்னேஸ்வரன் கூறுகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடும் பிழைகளை சுட்டிக்காட்டவே நாங்கள் தீர்வுத் திட்டத்தை அமைத்தோம்.72வருடங்களாக கடைப்பிடித்து வரும் தேசம் என்ற கோட்பாட்டை யுத்தத்தின் பின்னர் கைவிட வேண்டும் என்று கூட்டமைப்பு கூறியமையாலேயே நாங்கள் பிரிகின்றோம். அதே விடயத்தை சுட்டிக்காட்டி, தேசம் என்ற வார்த்தை ஓர் பிரச்சினைக்குரிய வார்த்தை என்பதால், அதை தவிர்க்க வேண்டும் என கேட்டுள்ளனர். தமிழ் மக்களின் தேச அந்தஸ்தை

**தொடர்ச்சி 11ம் பக்கம்**



# தொல்லியல் திணைக்களத்தினால் தொலைந்து போகும் நிலையில்

## வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம்

கோ- ரூபகாந்

வெடுக்குநாறிமலை காட்டுப் பகுதியில் பாரம்பரியத்தையும் தமிழர்களின் பண்டைய வாழ்க்கை முறையையும் வெளிக்காட்டும் முயற்சியில் இவ்வருடம் சிவராத்திரி விழா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலையத்தில் நடைபெற்றமை மற்றுமொரு வரலாற்று சிறப்பு.

**தா**யகத்தில் போர்க் காலத்தை விட போர் மௌனிக்கப்பட்ட காலகட்டத்தில் தமிழர் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொல்பொருள் சின்னங்கள், ஆலயங்கள், தமிழர் மரபுப் பொருட்களை அபகரித்து, வரலாற்றை மாற்றி எழுதும் முயற்சியில் சிறீலங்கா அரசும், அதன் அரசியல்வாதிகளும், பௌத்த பிக்குகளும் அன்று முதல் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். இந்த செயற்பாடுகள் போருக்கு பின்னரான இந்த காலப்பகுதியில் மேலும் தீவிரம் பெற்றுள்ளன. சிங்கள பௌத்த மேலாதிக்கம் காரணமாக வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என முக்கியமான திணைக்களங்களை சிறீலங்காவின் ஜனாதிபதியாக இருக்கும் பௌத்த தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் இருக்குமளவுக்கு சட்டத்தை உருவாக்கியுள்ளனர். மேற்குறித்த திணைக்களங்களில் எந்த செயற்பாடுகள் செய்ய வேண்டுமாக இருந்தாலும், ஜனாதிபதியின் அனுமதியின்றி செய்ய முடியாது.

சிங்கள பௌத்த மேலாதிக்கம் காரணமாக வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் திணைக் களம், மகாவலி அபிவிருத்தி திணைக் களம், தொல்லியல் திணைக்களம் என முக்கியமான திணைக்களங்களை சிறீலங்காவின் ஜனாதிபதியாக இருக்கும் பௌத்த தலைவரின் நேரடிக் கண்காணிப்பில் இருக்குமளவுக்கு சட்டத்தை உருவாக்கியுள்ளனர். மேற்குறித்த திணைக்களங்களில் எந்த செயற்பாடுகள் செய்ய வேண்டுமாக இருந்தாலும், ஜனாதிபதியின் அனுமதியின்றி செய்ய முடியாது.



இவ்வாறாக சிறீலங்கா அரசின் நிர்வாக எல்லைக்குள் தமிழர்களின் பூர்வீகம் அழிக்கப்பட்டும். அபகரிக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வருகின்றன.

இந் நிலையில் இவ்வாறான அதிகாரங்களைப் பயன்படுத்தி தமிழர்களின் மற்றுமொரு வரலாற்றுச் சிறப்புமிக்க பாரம்பரிய சொத்தான வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தையும் அதன் வளங்களையும் அபகரிக்கும் முயற்சியில் வனவளத் திணைக்களமும், தொல்லியல் திணைக்களமும், பொலிசாரும் இணைந்து நீதி மன்றில் பல வழக்குகளை தொடுத்துள்ளனர்.

ஆலயத்தின் அமைவிடமும் வரலாறும்

வவுனியா நெடுங்கேணி நகர்ப்பகுதியிலிருந்து சுமார் 8 கிலோமீற்றர் தொலைவில் வெடுக்குநாறி மரங்கள் சூழ்ந்த அடந்த காட்டுப் பகுதியில் அமைந்திருக்கும் வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில், 4000 வருடங்களுக்கு முன்பிருந்தே பரம்பரை பரம்பரையாக மரபுவழி வழிபாடு, மற்றும் பூஜை முறைகள் நடைபெற்று வருகின்றன. ஒலுமடு சந்தியிலிருந்து அடர்ந்த காட்டுப் பாதை ஊடாக 4.5 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள இந்த ஆலயத்திற்கு உழவு இயந்திரத்தின் மூலமும், நடந்துமே செல்ல முடியும்.

கதிர்காமம் மலைக்குச் செல்லும் அனுபவத்தை வவுனியா நெடுங்கேணி வெடுக்குநாறி மலையில் அனுபவிக்க முடியும். 4.5 கிலோ மீற்றர் காட்டுப் பிரதேசப் பயணம், அதன்பின் சுமார் 100 அடி உயரமுடைய மலையில் செயற்கை படி மற்றும் பெரிய மரங்களின் வேர்கள் போன்றவற்றைப் பயன்படுத்தியே மலை உச்சியில் இருக்கும் ஆதிலிங்கேஸ்வரரை வழிபட முடியும்.

இவ்வாறு இயற்கை மற்றும் வரலாற்று சிறப்பு டைய வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர்ஆலயத்தின்மீதுதற்போதுசிறீலங்காசிங்கள பௌத்த தலைவர்களின் கண் பட்டுவிட்டது. இதன் பிரதிபலிப்பு ஆலய நிர்வாகத்தினர் மீது வழக்குத் தாக்கல், தொல்பொருட்கள் இருப்பதாக தொல்லியல் திணைக்களம் முற்றுகை, வனவளம் பாதிக்கப்படுவதாக வனவளத் திணைக்களம், வனஜீவராசிகள் பாதிக்கப்படுவதாக வனஜீவரா



சிகள் திணைக்களம் என அனைத்தும் ஒன்றிணைந்து தமிழர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க புனித பூமியை அபகரித்து, சிவனைத் துரத்தி புத்தரை வரவழைக்கும் முயற்சியில் நேர்முகமாக பலரும் மறைமுகமாக பலரும் சிறீலங்கா அரச துணையுடன் 24 மணி நேரமும் முயற்சித்துக் கொண்டிருக்கின்றனர்.

இந் நிலையில் கோவில் நிர்வாகத்தினரின் முயற்சியில் விசேட நாட்களில் சிறப்பு பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன .

அந்த வகையில் கடந்த 21.02.2020 அன்று மகா சிவராத்திரி தினத்தை முன்னிட்டு வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய மாவட்டங்களில் இருந்து பொக்கிசம் கனடா என்னும் அமைப்பின் அனுசரணையில் இயங்கும் அறநெறியில் கல்வி கற்கும் 500 மாணவர்கள் வெடுக்குநாறி மலைக்கு வருகை தந்து ஆலயத்தை தரிசித்த அதே வேளை, கலை நிகழ்வுகளையும் நடத்தியிருந்தனர்.

இதேபோல ஒலுமடு, மற்றும் நயிநாமடு பாடசாலை மாணவர்கள் சிவராத்திரி தினத்தன்று இரவு விசேட கலை நிகழ்வுகளை அரங்கேற்றியிருந்தனர். போக்குவரத்து, குடிநீர், மின்சாரம் என எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாத

### வெடுக்குநாறிமலையில் சிறீலங்காஅரசின் ஒடுக்குமுறை

ஆலயத்தில் ஒலிபெருக்கித் தடை, மலையில் ஏறும் ஏணி வைப்பதில் தடை, பூசைகள் செய்வதற்கு தடை மக்கள் செல்வதற்குத் தடை என பல தடைகளை போட்டாலும், மக்களின் எழுச்சியில் இன்றும் வெடுக்குநாறிமலையில் பூசைகள் நடைபெற்று வருகின்றன.

தமிழ் இனத்தின் அழிவுக்கு காரணமாக இருந்த நபரே இன்று சிறீலங்காவின் சனாதிபதி. இவருடைய ஆட்சிக் காலத்திலும் தமிழ் மக்களின் பூர்வீக வரலாற்று இடங்கள் பறிபோகக் கூடாதென இன்றும் தாயக உறவுகள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந் நிலையில், புலம்பெயர் உறவுகளும் தாயக பிரதேசங்களுக்கு விடுமுறையில் வரும் போது கதிர்காமம் போக வேண்டாம் என்று சொல்லவில்லை. எமது மண்ணில் இருக்கும் வெடுக்குநாறிமலைக்கு சென்று சிவனின் ஆசியைப் பெற்று உலக தமிழர்களின் பாரம்பரியத்தை காப்பாற்ற உங்கள் கரம் உயரட்டும்.

கதிர்காமக் கந்தன் இன்று ஸ்ரீபாத புத்தனாக மாறிவிட்டான், திருகோணமலை வெந்நீரூற்று சிவன் கோவில் இன்று பௌத்த கோவில். பௌத்த ஆதிக்கம் சப்ரகமுவ கதிர்காமத்தில் ஆரம்பித்து முல்லைத்தீவு செம்மலை நீராவியடி பிள்ளையார் கோவில் வரை வந்து விட்டது.

தற்போது தமிழர் தாயகப் பிரதேசங்களான வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை போன்ற அனைத்து மாவட்டங்களிலும் புத்தர் வந்து குடியமர்ந்து விட்டார். இதில் வேடிக்கையான விடயம் என்னவெனில், புத்தரின் பக்தர்கள் இல்லாத இடங்களில் அமைக்கப்பட்ட பௌத்த விகாரைகள் இன்று பறவைகள், குரங்குகளின் சரணாலயமாகி விட்டது. இருந்தும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிது புதிதாக தினந்தோறும் பௌத்த விகாரைகள் முளைத்துக் கொண்டே செல்கிறது. இந்நிலை தொடர்ந்தால், பௌத்த பிக்குமார் அடிக்கடி மேடைப் பேச்சுக்களில் சொல்லுவது போல் இலங்கை எதிர்காலத்தில் சிங்கள பௌத்த நாடாக மாறும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இவற்றை மாற்றியமைக்க புலம்பெயர் தமிழரும் ஈழத் தமிழரும் நவநாகரீக வாழ்க்கையில் மூழ்கிப் போகாது, எமது தாயகத்தைக் காப்பாற்ற நீண்டதூர நோக்குடன் திட்டங்களை தமிழர் தாயகப் பிரதேசங்களில் நடைமுறைப்படுத்தி, எமது மண்ணையும் தமிழர்களின் வரலாற்றையும் காக்க வேண்டியது தலையாய கடமையாகும்.

• • •

# கல்வி அடைவில் ஊக்கமளித்தலின் இன்றியமையாமை; தமிழ் சமூகம் எங்கு நிற்கிறது



மோஜிதா

**“உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தோல்வி அடைவதற்கு எவ்வளவு சக்தி தேவையோ அதில் பாதி இருந்தால் போதும் நீங்கள் வெற்றியடைந்து விடலாம்.”**

வெற்றியடைய உங்களுக்குப் பொருத்தமான ஊக்கமளிக்கும் வழிகாட்டி அவசியம். அவர் ஒரு அறிஞராகவோ, ஆசிரியராகவோ, தந்தையாகவோ, நண்பராகவோ, மதகுருவாகவோ, ஒரு அமைப்பாகவோ இருக்கலாம் ,ஏன் ஒரு புத்தகமாகக் கூட இருக்கலாம்.

இவ்வாறு கல்வி கற்கும் மாணவர்களின் சிறந்த அடைவிற்கு ஊக்கமளித்தல் இன்றியமையாததாகும். சிறந்த கல்வி அடைவு என்பது கல்வியில் குறிப்பிட்ட நிலைக்கு மேல் தமது பெறுபேற்றைப் பெற்று தமது தகுதியை அதிகரித்துக் கொள்ளுதலாகும்.

ஊக்கமளித்தல் எனும் போது அக் கல்வி அடைவை உயர்த்திக் கொள்வதற்காக வழங்கப்படும் கல்வியியல், பொருளியல், உடலியல், உளவியல், சமூகவியல் ரீதியான உந்துதல்களாகும். சிறந்த உந்துதல் வழங்கும் போது சிறந்த கல்விப் பெறுபேறுகளும், குறைவான பெறுபேற்றிற்கு உந்துததல் அளித்தல் இன்மையும் ஒரு காரணமாக அமையலாம்.

பாடசாலை மாணவர்களை எடுத்துக் கொண்டால், ஆரம்பப் பிரிவில் அதாவது, தரம் ஒன்று தொடக்கம் ஐந்து வரை பெற்றோரின் ஊக்கம் அதிகமாகக் காணப்படுவதுடன், கனிஷ்ட இடைநிலைப் பிரிவில் (ஆறு தொடக்கம் ஒன்பது) பிள்ளையின் சுயமான ஊக்கலும் மேலும் சிரேஷ்ட இடைநிலைப் பிரிவிலும் உயர்தரத்திலும் (ஒன்பது தொடக்கம் பதின் மூன்று) பாடசாலை, சமூகம், பெற்றோர் என பல தரப்பட்டவர்களின் ஊக்கமும் சாதாரணமாகக் காணப்படுவதை அவதானிக்கலாம்.

இருந்த போதிலும் ஊக்கமளித்தலானது எப்படிக் கல்விப் பெறுபேற்றில் தாக்கம் செலுத்துகின்றது என சில தற்போதைய நடைமுறை உதாரணங்களுடன் அதாவது மட்டக்களப்பின் தற்போதைய கல்வி அடைவுடன் ஒப்பிட்டு விமர்சன ரீதியில் நோக்குவோம்.

மட்டக்களப்பு மாவட்டமானது மட்டக்களப்பு, மட்டக்களப்பு மேற்கு, மட்டக்களப்பு மத்தி, பட்டிருப்பு, கல்குடா என ஐந்து கல்வி வலயங்களைக் கொண்டுள்ளது.

இவ் ஐந்து வலயங்களிலும் கடந்த சில வருடங்களில் வெளிவந்த க.பொ.த உயர்தரப் பெறுபேறுகளின் அடிப்படையில் மட்டக்களப்பு மத்தி கல்வி வலயமானது அதாவது எமது சகோதர இனப் பாடசாலைகளை மாத்திரம் கொண்ட வலயம், அதி சிறந்த பெறுபேறுகளையும், மருத்துவ, பொறியியல் பீடத்திற்குத் தெரிவான மாணவர்களின் அதிக எண்ணிக்கையையும் கொண்டுள்ளது.



இப்பெறுபேற்றின்படி மீதமுள்ள நான்கு தமிழ் வலயங்களுடன் ஒப்பிடும் போது கல்வி அடைவில் இவ் வலயம் மிக உயர்வாக உள்ளது. இதன் மறைமுக இரகசியமும் ஊக்கமளித்தல்தான் என்றால் மிகையாகாது.

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயம் மாத் திரமல்ல ஏனைய சகோதர இனத்தவர்கள் இன்று கல்வி அடைவில் பெறும் பெறுபேறுகளையும் நீங்கள் ஒப்பிட்டுப் பார்க்கலாம். ஆனால் எமது தமிழ் மாணவர்கள் ஆரம்ப காலத்தில் க.பொ.த உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றாலும், தற்போது நவீன தொடர்பாடல் சாதனங்களின் மோகம், அதிக போதைவஸ்துப் பாவனை மற்றும் பொருளாதார ரீதியான பின்னடைவு போன்றவற்றால் இன்று பெறுபேறுகளில் பின்தங்கிய நிலையில் உள்ளனர்.

அதுமட்டுமல்லாமல், ஏனைய சகோதர இன மதஸ்தாபனங்கள் கல்விக்காக வழங்கும் ஊக்குவிப்பில் அரை மடங்கு கூட எமது இந்து ஆலயங்களோ இந்து மத நிறுவனங்களோ வழங்குவதில்லை. வெறுமனே திருவிழாக்களுக்கும் வாண வேடிக்கைகளுக்கும் இலட்சக் கணக்கான பணத்தை போட்டி போட்டு செலவிடுகின்றனர்.

இந்நிலையில், பொருளாதார ரீதியில் இடர்ப்படும் தமிழ் ஏழை மாணவர்கள் எத்தனையோ பேர் இன்றும் இருந்த வண்ணமே உள்ளனர். அவர்களுக்கு பொருளாதார ரீதியில் உதவி வழங்கினாலே போதும் தமிழ்ச் சமூகம் கல்வியடைவில் உச்சத்திற்குச் சென்றுவிடும்.

மேலும் எமது சகோதர மத நிறுவனங்கள் உயர்தர கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்களை கொழும்பு மற்றும் வெளி மாவட்டங்களிலிருந்து மட்டக்களப்பிற்கு வரவழைத்து அவர்களின் சமூகத்திற்காக பிரத்தியேக வகுப்புக்களை நடத்துகின்றனர்.

மேலும் வார இறுதி நாட்களில் பெற்றோரும் மத நிறுவனங்களுக்குப் பொறுப்பானவர்களும் தங்கள் சமூகத்தின் கல்விக்காக மேல் மாகாணம் மற்றும் வெளி இடங்களுக்கு பேருந்துகள் மூலம் பிள்ளைகளை அழைத்துச் சென்று கல்வி புகட்டுகின்றனர்.

அத்துடன் வறுமையான பிள்ளைகள் படிப்பதற்கு மாதம் தோறும் புலமைப் பரிசில்கள் வழங்குகின்றனர். நகர்ப்புறங்களில் தங்கி கல்வி கற்பதற்கு தங்குமிடங்களை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர். மேலும் வேலை வாய்ப்புக்கள், போட்டிப்பரீட்சைகள்பற்றிய விழிப்புணர்வுகளை உடனுக்குடன் சமூக வலைத்தளங்களில் குழுக்களாக்கியும், சமய ஆராதனைகளின் பின்னரும் மக்களுக்குப் பரப்புகின்றனர்.

ஆனால் எமது தமிழரிடம் சுயநலமிக்க தன்மையும் பொருளாதார ரீதியில் உயர்வானவர்கள் அவர்களின் பிள்ளைகளை மாத்திரம் வெளி நாடுகளில் படிக்க வைப்பதும் ஏனைய ஏழைத் தமிழ் மாணவர்களின் கல்வி பற்றி சிந்திக்காத தன்மையும் காணப்படுகின்றது. மேலும் தமிழர் மத்தியில் கல்விக்கான ஊக்குவிப்பு வழங்கும் தன்மையும், மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்டும் தன்மையும் ஏனைய சகோதர சமூகத்துடன் ஒப்பிடும் போது குறைவாகவே உள்ளது.

ஓரிரு தமிழ்ச்சமூக அமைப்புக்கள் கல்வி பற்றிய விழிப்புணர்வுகளை மற்றும் நிதி உதவிகளை வழங்கினாலும் அவை நம் சமூகத்திற்குப் போதுமானதாகக் காணப்படவில்லை. இவ்வாறான நிலமைகளின் காரணமாகவே எமது மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதி குறைவான சதவீதத்தில் காணப்படுகின்றது. இந்நிலை தொடர்ந்தால் குறிப்பிட்ட சில வருடங்களில் எமது தமிழ் மாணவர்கள் உயர்ந்த பல பதவிகளில் அங்கம் வகிக்கமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்படுவர்.

ஆகவே மட்டக்களப்பாக இருந்தாலும் சரி தமிழ் மாவட்டங்கள் எதுவாக இருந்தாலும் சரி எமது தமிழ் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக சைவ ஆலயங்கள், தமிழ் சங்கங்கள், தமிழர் அமைப்புக்கள், செல்வந்தர்கள், அரசியல்வாதிகள் போன்றோர் பொருளாதார ரீதியிலும் கல்வியல் ரீதியிலும் உங்களால் இயன்ற ஊக்குவிப்பை வழங்கி எமது தமிழ் மாணவர்களின் உயர்ந்த கல்வி அடைவிற்கு வழிகாட்டுங்கள்.

**“ஊக்குவிப்பே கல்வியின் வெற்றி”**

• • •

# அனைத்துலகத் தாய்மொழித் தினம்
# பெப்ரவரி 21




ஆய்வாளர் சூ.யோ. பற்றிமாகரன்

## தாய்மொழி மனித உரிமைகளின் படிக்கல்

**•தாய்மொழி அழிதலுக்கான புறக்காரணி அரசின் ஒருமொழிக் கொள்கை**
**•அகக்காரணி பெற்றோர்களது தாய்மொழி மேலான அலட்சியம்**
**•உறுதிமொழி : தமிழைக் காக்க வளர்க்க இயன்றதை நாம் செய்வோம்**

ஒருவரின் 'தாய்மொழி' அல்லது 'நாவின் தாய்' என்பதை, ஐக்கிய நாடுகள் சபை அவர் தனது மிக இளமைக் காலத்தில் பேசத் தொடங்கிய மொழி என்று இரத்தினச் சுருக்கமாக விளக்குகிறது. தாய்மொழி என்பது ஒரு மொழியாகவே தொன்மை முதல் கருதப்பட்டு வந்தாலும், பன்மொழிகள் பேசும் பல்கலாச்சார குடும்பப் பின்னணியில் வளரும் குழந்தைகள் இரு மொழிகளைத் தம் இளமை மொழியாக அகப்படுத்திக் கொள்ளுதல் இயல்பு நிலையாக உள்ளது. இதனால் இரண்டு மொழிகள் தாய்மொழிகளாக மாறிவிடும் நிலையில் எந்த மொழி அந்தக் குடும்பத்தால் அதிகம் பயன் படுத்தப்படுகிறதோ அதில் குழந்தை பெரு வளர்ச்சி பெற்று மற்றைய மொழி வழக்கிறந்து போய்விடும் அபாயம் இயல்பாகிறது.

ஒருமொழி அழியும் பொழுது வெறுமனே அம்மொழியின் சொற்களும் அச்சொற்களுக்கான பொருள்களும் மட்டும் அழியவில்லை அந்த மொழி பேசிய இனத்தின் அடையாளம், தொன்மைமிகு வரலாறு, பெருமைமிகு மனிதக் கலாச்சாரம் அனைத்தும் அதனுடன் சேர்ந்து அழிகின்றன. இதனாலேயே தேச இனங்களை ஆக்கிரமிப்புச் செய்யும் மேலாண்மைகள் தங்கள் நாடுகளில் ஒருமொழிக் கொள்கையைக் கொண்டு வந்து அத்தேச இனத்தின் இருப்பினையே அழித்து அம்மக் களையும் அவர்களின் மண்ணையும் அடிமை கொள்கின்றன. இதனால் தாய்மொழி என்பது ஒரு மனிதனின் மனித உரிமைகளின் படிக்கல்லாகிறது.

ஒரு குழந்தை வளரும் நாட்டில் ஒரு மொழிக் கொள்கையை அரசு முன்னெடுக்கும் போக்கு இருப்பின் அரசின் ஆட்சி மொழியே குழந்தையின் வழக்கு மொழியாகப் புறத் தேவைகளாலும் புறக்கவர்ச்சிகளாலும் மாற மாற குழந்தையின் தாய் வழி மொழி அந்தக் குழந்தைக்கு வழக்கிறந்த மொழியாகி விடும். இதனை ஒரு மொழியின் அழிவுக்கான புறக்காரணியாக ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சாரத்திற்கான அனைத்துலக அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

அதே வேளை, இவ் அமைப்பு பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் தாய்மொழியினைப் பேசுவதில், எழுதுவதில், வாசிப்பதில் காட்டிவரும் எதிர்மறையான போக்கே ஒரு தாய் மொழியின் அழிவுக்கான உட்காரணியாகத் தொடர்கிறது எனவும் எச்சரிப்பு செய்துள்ளது.

உலகெங்கும் ஐரோப்பிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில், குறிப்பாக ஆங்கில காலனித்துவ ஆட்சி நிலவிய நாடுகளில் ஆங்கிலம் ஆட்சி மொழியாக்கப்பட்டதின் விளைவாகவும் வர்த்தக மொழியாக, அறிவியல், தொழில்நுட்ப மொழியாக ஊக்குவிக்கப்பட்டதன் விளைவாகவும் ஒருமொழிக் கொள்கை நேரடியாகவும் மறைமுகமாகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு ஆசிய, ஆபிரிக்க, அமெரிக்க, அவுஸ்திரேலிய தாய்மொழிகள் பல்லாயிரக் கணக்கில் வழக்கிறந்த வரலாற்றை உலகு பதிவு செய்துள்ளது. காலனித்துவ காலத்தின் பின்னரும் ஒருமொழிக் கொள்கையைப் புதிய கால னித்துவமாகத் தனது மக்கள் மேல் திணித்த இலங்கை போன்ற பல நாடுகளில் இன்றும் அந்த நாடுகளின் பெரும்பான்மையினர் அல்லாத தேசமக்களின் தாய்மொழிகள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இன்று உலகில் 7000 முதல் 8000 வரையான மொழிகள் காணப்பட்டாலும் 200க்கு உட்பட்ட மொழிகளே நாடுகளில் தேசிய மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சிலநூறு மொழிகளே மக்களால் நாளாந்த வாழ்வில் அவர்களால் விளங்கிப் பேசப்பட்டு வருகின்றன. இதன் விளைவாகக் கடந்த முன்னூறு ஆண்டுகளில் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட மொழிகள் உலகில் இருந்து மறைந்து விட்ட வரலாற்றையும், இன்றுள்ள மொழிகளிலும் அரைவாசி மொழிகள் அழிந்து கொண்டு போகின்ற சமகால வரலாற்றையும், 2010ஆம் ஆண்டின் உலக மொழிகளின் வரைபடத்தின் படி 1950 முதல் 2010க்கு இடையான 60 ஆண்டு காலத்தில் 2500 மொழிகள் இறந்து கொண்டும் 230 மொழிகள் இறந்து விட்டது மான வரலாற்றையும், தற்பொழுது இரண்டு வாரங்களுக்கு ஒரு மொழி அழிவுறும் வேகத்தையும் யுனெஸ்கோ பதிவுசெய்துள்ளது.

இந்நிலையில் உலகில் தாய்மொழிகள் அழிந்து வரும் அபாயத்தை நீக்குவதற்கான அனைத்துலகக் கடப்பாட்டின் வெளிப்பாடாகவே உலகத் தாய்மொழித் தினத்தை ஐக்கிய நாடுகள் சபை 21ம் நூற்றாண்டின் தொடக்கமாக 2000ஆம் ஆண்டு முதல் கொண்டாடி வருகிறது. 1952ஆம் ஆண்டு பெப்ரவரி 21ஆம் நாள் பாகிஸ்தானின் ஆட்சியில் இருந்த வங்களாப் பிரதேசத்தின் டாக்காப் பல்கலைக்கழகத்தில் வங்காள மொழிக்கான உரிமையினைக் கோரி பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்த பொழுது 4 மாணவர்கள் கொன்றழிக்கப்பட்ட துயர வரலாற்றை மீள்நினைவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் இத் தினத்தை உலக தாய்மொழித் தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தி கொண்டாடி வருகிறது. 16.05.2007இல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் A/RES/61/266 இலக்கத் தீர்மானம் உலகில் உள்ள மக்களால் பயன்படுத்தப்படும் மொழிகளை நிலைப்படுத்தவும் பாதுகாக்கவும் வேண்டுமென உலக நாடுகளுக்கு அறிவித்தது.

இன்று உலகத் தாய்மொழி தினத்தை தமிழர்களாகிய நாமும் கொண்டாடும் இவ்வேளையில், இறந்து கொண்டிருக்கும் மொழிகளில், தமிழ்மொழியையும் உலகின் மொழிகளின் வரைபடம் சுட்டிக்காட்டியுள்ளமையை நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. எவ்வளவுதான் மின் எண்ணியலில் தமிழ் மொழி சிறப்புற்றாலும், உலகெங்கும் ஈழத்தமிழர்கள் உலகின் முக்கிய நகரங்களில் எல்லாம் அரசியல் புகலிட வாழ்வின் வழி பரந்து வாழ்ந்து அந்த அந்த நாடுகளின் இனத்துவச் சிறுபான்மைக் குடிகளாகி இன்று தமிழ் உலகமொழியாகப் பரிணாமம் அடைந்து வந்தாலும், தமிழ்ப் பெற்றோர்கள் தங்கள் மொழியைத் தங்கள் பிள்ளைகளின் மிக இளமைக்காலப் பேச்சு மொழியாகவும் இளமைக்கால வழக்கு மொழியாகவும் ஈழத்திலும், தமிழகத்திலும், தாங்கள் வாழும் நாடுகளிலும் வழக்கு மொழியாகத் தொடராது போனால், தமிழ்மொழி உலகில் அழிந்து விடக்கூடிய மொழிக ளின் பட்டியலில் இடம் பெற்றுக் கொண்டே இருக்கும்.

மேலும் ஈழத்தமிழர்களுக்குத், தங்கள் தாய் மொழியின் அழிவுக்கு 1956 முதல் இன்று வரை ஈழத்தில் சிங்கள பௌத்த பேரினவாத அரசுக்கள் ஒருமொழிக் கொள்கை மூலம் திட்டமிட்டுச் செய்து வரும் செயற்பாடுகளை உலகுக்கு எடுத்துரைக்கும் பெரும் பொறுப்பும் கடமையும் இன்றைய தினத்தில் உண்டு.

சிங்கள பௌத்த பேரினவாதம் 1956ஆம் ஆண்டின் சிங்களம் மட்டும் சட்டம் என்னும் ஒருமொழிக் கொள்கையைப் பிரகடனம் செய்து ஈழத்தமிழர்களின் தாய்மொழி அழிப்புச் செயற்திட்டத்தை தொடங்கியது.
64 ஆண்டுகளாகத் தொடரும் அந்த ஈழத்தமிழர் தாய்மொழி அழிப்புத் திட்டத்தின் உச்சமாக இன்று கோட்டபாய இராஜபக்ச அரசு வெளிப்படையாகவே " அபே ரட்ட (எங்களுடைய நாடு), அபே ஜாதிய (எங்களுடைய இனம்), அபே ஆகமய (எங்கள் மதம்) " என்று சிங்கள பௌத்த நாடாக இலங்கையை அறிவித்துள்ளது.

அத்துடன் தமிழ் மக்களின் சனநாயகத்தினை மறுத்து சிங்கள பௌத்த பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா என்பதனால், எந்த அரசியல் அதிகாரப் பரவலாக்கலையும் தமிழர்களுக்குச் செய்ய இயலாது என இந்திய மத்திய அரசுக்குத் தன் அரச அதிபர் மூலமும் தன் பிரதமர் மூலமும் உறுதியாக எடுத்துரைத்துள்ளது.

தொடர்ந்து அமெரிக்காவோ ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையகமோ மனித உரிமைகளை மீளப் பேணுதல், யுத்தத்தின் பின்ன ரான மாற்று நீதியை உருவாக்கல் என்பனவற்றின் அடிப் படையில் சிறிலங்கா இராணுவத்தால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கான பொறுப்புக்கூறல், நீதி வழங்கல், அவர்களின் கிட்டிய குடும்ப உறுப்பினர்களின் புனர்வாழ்வு என்பனவற்றுக்கான வழிகாட்டல்களைச் செய்ய இயலாது எனவும் துணிகரமாகச் சிறிலங்காவுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதி மூலம் எடுத்துச் சொல்லி, நீதியானதும் பாராபட்சமற்றதுமான சட்டத்தின் ஆட்சியை சிறிலங்காவில் அனுமதிக்க முடியாதெனச் செயற்பட்டு வருகிறது.

இச் சூழலில், சிறிலங்கா அரசாங்கத்தின் இத்தகைய செயல்களால் அரசற்ற தேச இனமாகத் தவிக்கும் ஈழத்தமிழர்களின் தாய்மொழி சிறிலங்காவால் அழிக்கப்பட்டு வருவதைத் தடுத்து, காக்கும் பொறுப்பு உலக நாடுகளதும் உலக அமைப்புக்களதும் கடமை என்பதை இந்தத் தாய் மொழித் தினத்தில் உலகெங்கும் உள்ள ஈழத் தமிழர்கள் தாங்கள் வாழும் நாடுகளின் மக்களுக்கும் அரசுக்களுக்கும் எடுத்துரைக்க வேண்டும்.

அதே நேரத்தில் 1956 முதல் இன்று வரை ஈழத்தில் தாய்மொழியைப் பாதுகாப்பதற்காக உயி ரிழந்த நூற்றியெழுபத்தாறாயிரத்திற்கு மேற்பட்ட ஈழத்தமிழர்களையும், பல இலட்சக் கணக்கில் உடமைகளையும் வாழ்வையும் வாழ்ந்த

**தொடர்ச்சி 11ம் பக்கம்**

# இந்திய மத்திய அரசை இக்கட்டான நிலைக்கு தள்ளும்

# குடியுரிமை திருத்தச் சட்ட போராட்டங்கள்

**கல்யாணி**



இந்தியாவில் தற்போது கவனத்தை ஈர்ப்பது குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராக மக்கள் நடத்தி வரும் போராட்டமேயாகும். இந்தியாவில் எல்லோரையும் பேச வைப்பதுடன், உலக மக்களை ஒருகணம் திரும்பிப் பார்க்கவும் வைக்கின்றது.

இந்த குடியுரிமைத் திருத்தச் சட்டம் இறுதியாக கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 09ஆம் திகதி மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவினால் பாராளுமன்றத்தில் நிறைவே ற்றப்பட்டது. அத்துடன் 11 டிசம்பர் 2019 அன்று லோக்சபாவிலும் நிறைவேற்றப்பட்டது. இந்த குடியுரிமைத் திருத்தச் சட்ட மசோதவால் ஈழத் தமிழர்களும், இஸ்லாமிய மதத்தவருமே புறக்கணிக்கப்பட்டிருந்தனர்.

இதனையடுத்து, இந்தியாவின் பல இடங்களிலும் போராட்டங்கள் வெடித்தன. இஸ்லாமிய மதத்தவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். வட இந்தியாவிலும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிரான போராட்டங்கள் வெடித்தன. டெல்லி ஷாஹீன் பாக் இல் தொடர்ந்து இரண்டு மாதங்களைக் கடந்தும் போராட்டம் நடைபெற்று வருகின்றது.

அதேவேளை தமிழகம் மற்றும் புதுச்சேரியிலும் போராட்டங்கள் நடைபெற்றன. 2 மாதங்களிற்கும் மேலாக ஏதோ ஒரு வடிவில் போராட்டம் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றது. குடியுரிமைத் திருத்தச் சட்டம் வாபஸ் பெறப்பட வேண்டும், இந்த மசோதா சட்டசபையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக உள்ளது.

இதனிடையே கடந்த 14ம் தேதி சென்னை வண்ணாரப்பேட்டை லாலாகுண்டா பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் குடியுரிமை திருத்த சட்டத்தை திரும்பபெற வலியுறுத்தி போராட்டம் நடத்தினர். இந்தப் போராட்டத்தில் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என முழுக் குடும்பத்தவர்களும் இரவு பகலாக தொடர்ந்து போராடினர்.

போராட்டக்காரர்கள் தங்கள் கருத்துக்களைக் கூறும் போது, தாங்கள் தங்களுக்காக மட்டும் போராடவில்லை. இந்தச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களுக்காவும், பிற மதத்தவர்களுக்காகவும் சேர்த்தே போராட்டத்தை நடத்துவதாக கூறினர். பேரணியில் தேசியக் கொடியை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ஈடுபட்டனர். பொது மக்களுக்கோ அல்லது போக்குவரத்திற்கோ இடையூறு செய்யாதவாறு அமைதியாக இந்தப் போராட்டம் நடைபெற்றது.

14ஆம் திகதி இரவையும் கடந்து போராட்டம் தொடர்ந்ததால் போராட்டக்கா ரர்களை கலை ந்து போகுமாறு காவல்துறையினர் கோரிக்கை விடுத்திருந்தனர். அதை பொருட்படு த்தாது போராட்டத்தில் மக்கள் ஈடுபட்டிருந்தனர். இதன் போது காவல்துறையினரை நோக்கி பொதுமக்களிடையே இருந்து கற்கள் வீசப்பட்டதாக கூறப்பட்டது. இதில் 3 காவலர்கள் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அங்கு காவல்துறையினர் பெருமளவில் குவிக்கப்பட்டனர். போராட்டக்காரர்கள் மீது போலீசார் தடியடி நடத்தினர். இதில் ஆண்கள், பெண்கள் உள்பட ஏராளமானோர் படுகாயம் அடைந்தனர். 120 பேருக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இந்தச் செய்தி வெளியில் பரவத் தொடங்கியதும், சென்னையில் ஆலந்தூர், கிண்டி, அண்ணாசாலை, அண்ணா நகர், செங்குன்றம் போன்ற இடங்களில் கைதா னவர்களை விடுதலை செய்யக் கோரியும், இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்தும் இஸ்லாமியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

பின்னர் காவல்துறையினருடன் நடத்திய பேச்சுவார்த்தையையடுத்து கைதானவர்கள் இரவே விடுதலை செய்யப்பட்டனர். பின்னர் இந்தச் சம்பவத்தைக் கண்டித்து தமிழகம் மதுரை, வேலூர், திருநெல்வேலி, கன்னியாகுமாரி, கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளிலும் போராட்டம் நடைபெற்றது.



இராமநாதபுரம், தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களில் போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள் கைதானவர்கள் விடுதலை செய்யப்பட்டதும் தங்கள் போராட்டத்தை நிறைவு செய்து கொண்டனர்.

மேலும் போராட்டம் நடைபெற்ற போது, கோவையிலும், வண்ணாரப்பேட்டையிலும் இரண்டு சோடிகளுக்கு திருமணம் நடைபெற்றது. இதேவேளை 19ஆம் திகதி வண்ணாரப்பேட்டை போராட்டக்காரர்கள் தலைமைச் செயலகத்தை முற்றுகையிடும் போ ராட்டத்திற்கு ஆயத்தமானார்கள். அதேபோல் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களை முற்றுகையிடும் போராட்டத்திற்கும் ஒழுங்குகள் மேற் கொள்ளப்பட்டது. இந்தப் போராட்டத்தில் 23 முஸ்லிம் அமைப்பினர் பங்கு கொண்டிருந்தனர். ஆனால் தலைமைச் செயலக முற்றுகை போராட்டத்துக்கு உயர் நீதிமன்றம் தடை விதித்தது. இருந்தும் போராட்டம் குறித்த தினத்தில் நடைபெறும் என முஸ்லிம் அமைப்பினர் அறிவித்தனர். தலைமைச் செயலக முற்றுகைப் போராட்டத்தில் பங்குபற்ற 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கூடினர்.

போராட்டத்தைக் கட்டுப்படுத்த 15 ஆயிரம் காவல்துறையினர் குவிக்கப்பட்டனர். சேப்பாக்கம் முழுவதும் காவல் துறை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். 5 ஆயிரம் காவலர்கள் 60 வீடியோ கேமரா, 20 கண்காணிப்பு கேமரா, 5 டிரோன் கேமரா ஆகியவை பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டன. சிவில் உடையில் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். சட்டசபை கூட்டத்தொடர் நடைபெறும் போது இந்தப் போராட்டம் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தும் என காவல்துறையினரால் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் போராட்டக்காரர்கள் மிகவும் அமைதியான முறையில், காவல்துறையினருக்கோ, பொது மக்களுக்கோ தடைகள் ஏற்படுத்தாதவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டக்காரர்கள் செல்லும் வழிகளில் காவல்துறையினர் முள்வேலி அமைத்திருந்தனர். தலைமைச் செயலகத்தை சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தலைமைச் செயலகத்திற்கு அண்மையாக சேப்பாக்கம் ரயில் நிலையம் அருகே உள்ள சாலையின் இருபக்கமும் மறித்து தடுப்புகள் அமைத்திருந்தனர். போராட்டக்காரர்களிடையே கலகத்தை ஏற்படுத்த சிலர் முயற்சி செய்ததாகவும் கூறப்படுகின்றது. எனினும் போராட்டக்காரர்கள் அமைதியை பேணிக் கடைப்பிடித்தனர்.

சேப்பாக்கம் வரை சென்ற போராட்டக்காரர்கள் நீதிமன்றத் தடை இருப்பதால், அதை மீற விரும்பாது தேசிய கீதம் பாடியதுடன், தங்களின் தலைமைச் செயலக முற்றுகைப் போராட்டத்தை முடித்துக் கொண்டனர். மத்திய அரசின் குடியுரிமை சட்ட திருத்தத்துக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்ற வலியுறுத்தி தமிழக சட்டசபையை முற்றுகையிடும் போராட்டம் நடத்திய 20,000 பேர் மீது சென்னை திருவல்லிக்கேணி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

போராட்டம், பேரணி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் எதிர்க்கட்சியினர் சார்பில் எதிர்க்கட்சிகள் சார்பான கட்சிகள் கையெழுத்துப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர். சுமார் 2 கோடியே 10 இலட்சம் கையெழுத்துக்கள் பெறப்பட்டு குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்பட்டது. அக்கடிதத்தில் இது வெறும் கையெழுத்தல்ல. தமிழக மக்களின் விருப்பங்களும், உணர்வுகளும் என்று கடிதம் எழுதப் பட்டிருந்தது.

மேலும் இந்தப் போராட்டம், இந்திய மத்திய அரசின் மீது வெளிநாடுகள் அழுத்தம் கொடுக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது. சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையம், இந்தியாவில் இஸ்லாமியர்களை நாடற்றவர்களாக்கும் சட்டங்களே இந்த குடியுரிமைத் திருத்தச் சட்டமாகும் என எச்சரித்துள்ளது.

அத்துடன் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தால் ஏராளமான சிறுபான்மையின மக்களுக்கு நாடற்றுப் போகும் நிலை ஏற்படும் என ஐ.நா. வருத்தம் தெரிவித்துள்ளது.

எந்த நாடு எதைச் சொன்னாலும், வருத்தம் தெரிவித்தாலும், கண்டனம் தெரிவித்தாலும், இந்த முடிவு இந்தியப் பிரதமர் மோடியினால் எடுக்கப்பட்டது. எனவே இது கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்படும் என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. உலக நாடுகளும் தங்கள் பங்கிற்கு கவலைகளை கண்டனங்களை தெரிவிக்கலாம். ஆனால் இந்தியப் பிரதமரைப் பொறுத்தவரையில் தான் எடுத்த எந்த முடிவுமே சரியானது என்பதே அவரின் முடிவு.

• • •




# உலக மைய நீரோட்ட ஊடகங்களை புரிதல்

**பகுதி 1**

**மைய** நீரோட்ட ஊடகங்கள் சில நாடுகளையும் அதன் தலைமைகளையும் மோச மாக சித்தரித்து வந்ததும் வருவதும் கண்கூடு. மையநீரோட்ட ஊடகங்களை பற்றி புரிதல் இல்லாமல் இவற்றை தொடர்ச்சியாக வாசிப்பவர்களும் இவை பரப்புரை செய்யும் கருத்துக்களுக்கு அடிமையாகுவார்கள் என்பதும் கண்கூடு.




இம்மையநீரோட்ட ஊடகங்கள் பொய்த் தகவல்கள் பரப்பினார்கள், பரப்புவார்கள் என்பதும் இதை ஆழமாக வாசிப்பவர்களுக்கு தெளிவாக தெரியும். ஈராக்கில் சதாம் ஹூசேன் இரசாயன ஆயுதங்கள் வைத்திருக்கிறார் என்ற பரப்புரையையும், அவரை போர்க் குற்றவாளி என்று தூக்கிலிட்டதையும், இன்று ஈராக் நாட்டின் நிலைமையையும் நாம் மறக்கலாகாது. லிபியாவின் கடாபி பற்றி வந்த அவதூறுகளையும் அவர் படுமோசமாக கொலை செய்யப்பட்டதையும் இன்றைய லிபியாவின் நிலைமையையும் நாம் மறக்கலாகாது.

இன்றும் இதே ஐ-அமெரிக்கா உலகெங்கும் இராணுவ தளங்கள் அமைப்பதில் கண்ணாக உள்ளது. எங்கெல்லாம் நல்ல அரசுகள் இல்லையோ, அவர்களை அணைத்து, அவர்களை “நமது கெட்டவர்களாக” கொண்டாடுவதும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கிறது. ஒரு காலத்தில் ஐ-அமெரிக்காவை எதிரியாக பார்த்த இந்தியாவும் இன்று ஐ-அமெரிக்காவின் இராணுவ கூட்டாளியாக மாறி வருகிறது. இந்தியாவின் தலைமையில் கெட்டவர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் இதிலிருந்து நாம் படிக்க வேண்டியது. இம்மையநீரோட்ட ஊடகங்கள் ஈழத்தமிழர்களின் ஆயுதப் போராட்ட காலத்தில் அவர்களைப் பற்றி தொடர்ச்சியாக மோசமாக சித்தரித்து வந்ததும், அதற்கு பல தமிழர்களும் தமிழர் அல்லாதவர்களும் அடிமையாகியதும் தெரிந்ததே. இறுதியில் என்ன நடந்தது? இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்பதை ஈழத்தமிழர்களுக்கு சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இனியும் ஈழத்தமிழர் இந்த மையநீரோட்ட ஊடகங்கள் பரப்பும் கருத்துக்களுக்கு அடிமையாகாமல் இருப்பதுதான் இங்கு முக்கியமானது.


முக்கியமாக இலங்கை தீவில் உயிர்த்த ஞாயிறு தாக்குதலும் அதன் அடியொற்றி தொடரும் ஐ-அமெரிக்கத் தலையீடுகளும் தரும் தெளிவை தமிழர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதற்காகத்தான் தாக்குதல் நடத்தப்பட்டதா என்று சந்தேகிக்கும் அளவுக்கு இந்த தலையீடுகள் தொடர்கின்றன. இதுதான் உண்மையாக இருந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

இரண்டாம் உலகப் போருக்கு பின்னரான ஏனைய ஐ-அமெரிக்க தலையீடுகளை பற்றி வில்லியம் பிளம் என்பவர் எழுதிய “நம்பிக்கை கொலை” என்ற நூலையொட்டி இப்பத்தியில் முன்னர் வந்த ஒரு தொடரும் இதற்கு ஆதாரம். நோம் சொம்ஸ்கியும் இதையேதான் “பரப்புரை மாடல்” என்ற நூலில் முதலில் விரிவாக விளக்கினார்.

இத்துணை ஆதாரங்கள் இருந்தும் உலகின் பெரும்பான்மை மக்கள் மையநீரோட்ட ஊடகங்களின் கருத்துக்களுக்கு அடிமையாக இருப்பதை எவ்வாறு புரிந்து கொள்ளலாம். இதற்கு பல காரணங்கள் சொல்லலாம். அதிகார மையங்களுக்கு மனிதர் இயற்கையாகவே ஈர்க்கப்படுவது இதில் முதன்மையான காரணம். இது இன்றைய மையநீரோட்ட ஊடகங்களுக்கு மட்டுமல்ல, காலம் காலமாக மனிதர்கள் வாழ்ந்த பலவிதமான வாழ்க்கை முறைகளிலும் இதுதான் நடந்தது.

**ந.மாலதி**

மனிதர்களை ஆட்டுவது பொருளாதார சுயநலத்திற்கும் அப்பால் அதிகார ஆசையே என்று பல தசாப்தங்களுக்கு முன்னர் பெட்ரன்ட் ரஸ்சல் எழுதி விட்டார். அதிகாரத்தை அடைய முடியாதவர்கள் அதிகாரம் உள்ளவர்களை அண்டி வாழ்வார்கள்.




இவ்விடயத்தில் மனித குரங்கின வகைகளை ஆய்வு செய்பவர்கள் சொல்வதையும் தெரிந்து வைத்திருப்பது பயனுள்ளது. மனித குரங்கின வகைகள் பற்றிய ஆய்வுகளை ஆங்கிலத்தில் *primatology* என்று குறிப்பிடுவார்கள். மனிதர், சிம்பன்சி, பொனொபோ, கொரில்லா மற்றும் ஒராங்குட்டான் என ஐந்து வகையான மனிதகுரங்கின வகைகள் அடையாளப்படுத்தப்படுகின்றன.

இவற்றின் பரிணாம வளர்ச்சியின் காலங்களையும் இவற்றின் மரபணுக்களையும் அவதானித்து மரபணுக்களில் மனிதருக்கு ஒரேயளவாகவும் நெருக்கமாகவும் இருப்பது சிம்பன்சியும் பொனோபோவும் என்கிறார்கள் இந்த ஆய்வாளர்கள். மனித குரங்கினங்கள் எல்லாம் மனிதரைப் போலவே சமூகமாக வாழ்பவை. சிம்பன்சி ஆணாதிக்க சமூகமாகவும் பொனொபோ பெண்ணாதிக்க சமூகமாகவும் வாழ்கின்றன. சிம்பன்சி பற்றி ஆய்வாளர்கள் பல காலமாக ஆய்வுகள் மேற்கொண்டிருக்கிறார்கள். சிம்பன்சி சமூக அரசியலில் ஆண்களுக்கு அதிகாரம் என்பது மிகவும் முக்கியமானது. அதற்காக கொலைகளும் இடம்பெறும்.

மனிதருக்கும் அவ்வாறே என்றுதான் பல காலமாக நம்பி வந்தார்கள். ஆனால் மனிதக் குரங்கினங்களில் மனிதர் போல ஏனையவை உலகளாவிய தொடர்புகளுடனும் தங்கு நிலைகளிலும் வாழவில்லை. இன்றைய மனித இனத்தின் உலகளாவிய வாழ்க்கை முறை புதியது. இருந்தாலும் மனித ஆண்களுக்கு அதிகாரத்தின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு மாறாக பொனோபோக்கள் சமூகம் பெண்களின் கூட்டொருமையில் தங்கியிருக்கிறது. மனித இனம் பொனொபோக்கள் போலும் வாழமுடியும் என்று சில ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

டேவிட் ஸ்லோன் வில்சன் (*David Sloan Wilson*) என்ற பரிணாம உயிரியல் (*Evolutionary Biology*) ஆய்வாளர் வேறொரு கோணத்தில் டார்வினின் பரிணாம கோட்பாட்டை மரபணுக்களின் பரிணாமத்துக்கு அப்பாலும் மேலும் விவரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தை முன்வைக்கிறார்.

மனிதர்கள் சிறு மானிட சமூகங்களாக மேலும் பரிணாமம் அடைந்திருக்கின்றன என்பது இவர் வைக்கும் கோட்பாடு.

இவற்றில் ஒத்துழைப்பு அதிகமுள்ள சமூகங்களே பாதுகாப்பாக இருந்ததால் ஒத்துழைப்பை போற்றும் சமூகங்களே பரிணாமத்தில் வெற்றிபெற்றுள்ளன. இதுவே சமயங்கள் உருவாக காரணம். ஆரம்ப காலத்தில் சமயங்கள் ஒத்துழைப்பை வளர்த்தன. இதனால் தான் சமயங்கள் அன்று மானிட பரிணாமத்தில் இருந்துள்ளது. இது 10,000 ஆண்டுகளுக்கு முன்னர், விவசாயம் ஆரம்பிப்பதற்கு முன்னர், தோன்றிய பரிணாமம். அப்போது மனிதர்கள் சிறு சமூகங்களாகவே வாழ்ந்தார்கள். கடைசி 10,000 ஆண்டுகளில் தொழில்நுட்ப வளர்ச்சிகளால் உருவான மனித சமூகம், சமூகத்தை புரட்டிப்போட்டுள்ளது.

**தொடரும்...**



# அலெப்போ களமுனை மூன்று நகர்வுகளில் துருக்கியின் தெரிவு என்ன?

கடந்த சில வாரங்களாக சிரியாவின் வடமேற்கு அலெப்போ களமுனை ஒரு புதிய கட்டத்துக்குள் நகர்ந்துள்ளது. ரஷ்யா மற்றும் ஈரான் நாட்டு படைகளின் உதவியுடன் சிரிய படைகள் எம்4 மற்றும் எம்5 நெடுஞ்சாலைகளை கைப்பற்றி அலெப்போவை முற்றாக கைப்பற்றும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

இந்த நெடுஞ்சாலைகள் தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் லராகியா ஆகிய நகரங்களை இணைக்கின்றது. இந்த படை நடவடிக்கையின் போது மேற்கொள்ளப்படும் செறிவான வான் தாக்குதல்களால் பெருமளவான மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், பல எதிர்த்தரப்பு படையினரும் கொல்லப்பட்டுள்ளனர். 13 துருக்கி நாட்டு படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆயிரக் கணக்கான மக்கள் துருக்கியை நோக்கி இடம் பெயர்ந்து வருகின்றனர். இதனைத் தொடர்ந்து துருக்கி நடவடிக்கையில் இறங்கியுள்ளது. அது தனது படையினரை சிரியாவுக்கு நகர்த்தியுள்ளது. துருக்கிப் படையினர் அங்கு புதிய நிலைகளை அமைத்து வருகின்றனர். ரஷ்யா தமது விநியோக வழிகளை முடக்கலாம் என்ற அச்சம் துருக்கிக்கு உண்டு.

அலெப்போ பகுதி போர் தவிர்ப்பு வலையமாக 2017 ஆம் ஆண்டு துருக்கி, ரஷ்யா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பகுதியாகும். ஆனால் தற்போது சிரியாப் படைகள் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளை கைப்பற்றியுள்ளன. ஒவ்வொரு நகரம் வீழ்ச்சியுறும்போதும் பல ஆயிரம் மக்கள் துருக்கியை அல்லது அலெப்போ பகுதியை நோக்கி இடம்பெயர்கின்றனர்.




2018 ஆம் ஆண்டு அலெப்போ பகுதியை காப்பாற்றிய துருக்கி, அங்குள்ள ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களை களைவதாக ரஷ்யாவுக்கு வாக்களித்திருந்தது. ஆனால் துருக்கி தனது வாக்கை காப்பாற்றவில்லை. எனவே சிரிய படையினரின் தாக்குதலை ரஷ்யாவும் தடுக்க வில்லை.

அலெப்போவின் இழப்பு துருக்கிக்கு பேரழிவாக இருக்கும் என கருதப்படுகின்றது. அதாவது சிரியா எதிர்ப்பு படையினரின் நடவடிக்கை முற்றாக முறியடிக்கப்படும். அது எதிர்கால பேச்சுக்களை கேள்விக்குறியாக்கி விடும். சிரியா எதிர்ப்பு படையினரின் பிரதான ஆதரவாளராக துருக்கியே உள்ளது. எனவே இந்த இழப்பு துருக்கிக்கு இராஜதந்திர இழப்பாகும்.

அது மட்டுமல்லாது, 3 மில்லியன் மக்களும் துருக்கிக்கு அகதிகளாக செல்ல நேரிடும். அவர்களை பராமரிக்க துருக்கியால் இயலாது. தனது 13 படையினரை இழந்ததும் துருக்கிக்கு அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளது.

சிரியப் படைகளை துருக்கி எதிர்க்கும் போதும், அது ரஷ்யாவுடன் மோத விரும்ப வில்லை. 2015ஆம் ஆண்டு ரஷ்யாவின் தாக்குதல் விமானத்தை துருக்கி சுட்டு வீழ்த்தியதை தொடர்ந்து துருக்கியின் பொருட்களை ரஷ்யா தடை செய்திருந்தது. அது துருக்கியின் பொருளாதாரத்தை கடுமையாக பாதித்திருந்தது. அதேசமயம், ஐரோப்பிய ஒன்றியமோ, அல்லது அமெரிக்காவோ ரஷ்யாவுடனான மோதல்களை ஆதரிக்கவில்லை. அதன் பின்னர் மொஸ்கோவிடம் பகிரங்க மன்னிப்புக் கேட்ட துருக்கி உறவை மீண்டும் வளர்த்துக் கொண்டது. தற்போது அவர்களிடம் உள்ள உறவு 2015ஆம் ஆண்டு இருந்த உறவை விட பலமானது. துருக்கியின் பிரதான வர்த்தக பங்குதாரர் ரஷ்யா. அவர்களின் வருடாந்த வர்த்தக பொருளாதாரம் 25 பில்லியன் டொலர்கள்.




ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடையை விதித்த பின்னர் துருக்கியின் பிரதான எரிபொருள் விநியோகஸ்தராக ரஷ்யாவே உள்ளது. ஐரோப்பாவுக்கான ரஷ்யாவின் எரிபொருள் விநியோகத்தின் வழங்கல் பாதையாக துருக்கியே உள்ளது. தென்கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கான வழங்கல் பாதையையும் கடந்த மாதம் இரு நாட்டு தலைவர்களும் திறந்து வைத்துள்ளனர்.

மெடிற்றறேனியன் பகுதியில் இடம்பெறவுள்ள இயற்கைவாயு அகழ்வு நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா கிறீஸ் நாட்டுக்கு ஆதரவு வழங்கியுள்ள நிலையில் தனக்கு ரஷ்யா ஆதரவு தரும் என்ற நம்பிக்கை துருக்கிக்கு உண்டு.

லிபியா விவகாரம் தொடர்பிலும் இரு நாடுகளும் ஒரு அணியில் நிற்கின்றன, அவர்கள் எதிர்த்தரப்புக்கு ஆதரவு தருகின்றன. லிபியா விவகாரத்தில் தற்போது ரஷ்யா மிகவும் ஆர்வமாக உள்ளது.

துருக்கி ரஷ்யாவிடம் இருந்து நேட்டோவின் எதிர்ப்புக்களையும் மீறி எஸ் 400 என்ற அதி நவீன ஏவுகணைத் தொகுதியை வாங்கியுள்ளது. ரஷ்யாவின் எஸ்யூ-35 மற்றும் எஸ்யூ-37 ரக நவீன போர் விமானங்களையும் வாங்கவுள்ளது.

எனவே தற்போது அலெப்போ விவகாரத் தில் துருக்கிக்கு 3 தெரிவுகளே உண்டு. முதலாவது தெரிவு, இதுவே துருக்கிக்கு சாதகமானது, போர் தவிர்ப்பு வலையத்தை பேணுவதுடன், உடன்பாட்டையும் ஏற்றுக்கொள்வது.

இரண்டாவது, களமுனையில் இருந்து பின்வாங்கி சிரிய படைகள் நெடுஞ்சாலைகளை கைப்பற்றுவதை அனுமதிப்பது. ஆனால் துருக்கி எதிர்த்தரப்புக்கு விமான எதிர்ப்பு ஆயுதங்களை வழங்கியுள்ளனர். அதன் மூலம் இரண்டு உலங்குவானூர்திகள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன.

மூன்றாவது, தனது வான் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ரஷ்ய படையினர் பாதிக்கப்படாதவாறு தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் துருக்கிக்கு சில சமிக்கைகளை அமெரிக்கா காண்பித்துள்ளது. துருக்கிக்கு அமெரிக்கா தனது ஆதரவுகளை தெரிவித்துள்ளது. துருக்கியையும், அதன் நேட்டோ கூட்டணியையும் பின்தள்ள ரஷ்யா முயன்று வருகின்றது.

எனவே எதிர்வரும் வாரங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கும் என நம்பப்படுகின்றது. ரஷ்யாவின் மீள் பிரவேசம் என்பது மேற்குலகத்தின் கொள்கைகளில் பல மாற்றங்களைக் கொண்டு வரலாம் என நம்பப்படுகின்றது என அல்ஜசீரா செய்தி ஆய்வு தெரிவித்துள்ளது.

சிறீலங்கா விவகாரத்திலும் ரஷ்யா அதிக தலையீடுகளை அண்மைக்காலங்களில் மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

• • •

## அனைத்துலகத் ... தொடர்ச்சி..

இடத்தையும் இழந்து தவிக்கும் ஈழத்தமிழ் மக்களையும் நினைவு கூருவதும் ஐக்கிய நாடுகள் சபையின் கடமையும் பொறுப்பும் என்பதை இந்நாளில் சுட்டிக் காட்டுவதும் அவசியமாகிறது.

மேலும் ஈழத்தமிழரின் தாய்மொழியை இறக்கவைக்கும் இந்தப் புறக்காரணிகளை மாற்றியமைக்கக் கூடிய வழியில் அகக்காரணிகளையும் முன்னெடுத்தல் அவசியமாகிறது. உலகெங்கும் உள்ள ஈழத்தமிழர்கள் தங்கள் குழந்தைகளுக்கு தமிழ்மொழியில் அவர்களைச் சிந்திக்கப் பழக்குதல் இதன் முதல் தேவையாகிறது. ஒருவர் எந்த மொழியில் சிந்திக்கின்றாரோ அந்த மொழியே அவரால் தன் மொழி என முன்னெடுக்கப்படும். எனவே தமிழ் மொழியை நாளாந்த வாழ்வில் பேச, எழுத, வாசிக்க இயலாத சூழலில் வாழும் பிள்ளைகளுக்கு அவர்களின் சிந்தனை தமிழ் வழி அமைந்தாலே அவர்களிடை தாங்கள் தமிழர்கள் என்ற இனத்துவ அடையாளத் தனித்துவம் தொடரும். தமிழ் பேச எழுதத் தெரியாத தமிழ் இளையவர்களையே பெரும்பான்மையாகக் கொண்ட உலகத் தமிழர்களிடை தமிழ்த்தன்மை தொடர்கிறது எனவும் இதுவே அவர்களின் இனத்துவத்தினை மற்றவர்கள் தனித்துவமாகப் பார்க்க வைக்கின்றது எனவும் ஆய்வாளர்கள் ஆய்வுகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். இதுவே தமிழினம் உலகில் அழியாது தொடரும் என்பதற்கான அறிவார்ந்த விளக்கமாகவும் உள்ளது.

மேலும் மொழி தொடர்பாடலுக்கான ஒன்று என்று அதனையும் வர்த்தகப்படுத்தும் நோக்கில் இலக்கிய இலக்கண அறிவில்லாத தமிழ் கற்பித்தலை அதுவும் வேற்று மொழிகள் வழி செய்தல் என்னும் புதிய போக்கு சிலரிடை வேகம் பெற்று வருகிறது. பல நாடுகளுக்குச் சென்ற அனுபவத்தில் தனிநாயகம் அடிகள் தமிழ் இலக்கியத்தை தமிழ்மொழி வழியாக கற்கும் திறன் பிள்ளைக்கு ஊட்டப்பட வேண்டும் என ஆணித்தரமாக எடுத்துரைத்தார். அத்துடன் அவரின் வேண்டுகோளாலும் பின்னர் தமிழக முதலமைச்சர்களின் நிதி அளிப்புகளுடனும் தொடங்கப் பெற்ற ஐரோப்பிய பல்கலைகழகத் தமிழ்ப் படிப்புக்கள் மாணவர்கள் இடையே தமிழ் படிக்கும் ஆர்வமின்மையால் மூடப்பட்டமையும் வரலாறு. எனவே தமிழ்க்கல்வி தமிழ்மொழி தமிழ் இலக்கியத்துடன் இணைந்து தமிழ்த்துறையில் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களால் முன்னெடுக்கப்படும் பொழுதே தமிழின் உயர்கல்வியும் வளர்ச்சி பெறும் என்பது அனுபவ உண்மையாக உள்ளது.

கல்வியியலில் டிலிட் என்னும் உலகின் அதிஉயர் பட்டம் பெற்றவரான தனிநாயக அடிகளின் வழிகாட்டலை நடைமுறைப்படுத்த ஒவ்வொரு ஈழத்துப் பெற்றோரும் தங்கள் குழந்தைகளுக்கு அவர்களின் இனத்துவ வரலாற்றை, கலாச்சார வரலாற்றை, எடுத்துக்கூறி வளர்த்தல் முதல் நிலையாகிறது. இரண்டாவது நிலையாகச் சாதி, மத, இன, நிற பேத மற்ற மனிதாயத்தைப் பேணவைக்கும் அவர்களின் தொன்மைப் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் அந்த வடிவில் அறிமுகம் செய்வதும், இதற்கு எதிரான சாதி, தீட்டு, துடக்கு ஆசாரமுறைமைகள் வழியான வடமொழியே சிறந்தது என்ற சமக்கிருதவாக்க மனநிலையை மாற்றியமைத்தலும், இந்த உயர் நிலையாக்கக் கனவின் தொடர்ச்சியாக அமையும் ஐரோப்பிய மொழிகளை பிறகலாச்சாரங்களை உயர்ந்தன என எண்ண வைக்கும் ஐரோப்பிய வாக்கத்தில் இருந்து விடுபடுதலும், இவற்றையே தமிழ்ப் பண்பாடு தமிழ்க் கலாச்சாரம் என வளர்க்கும் அறியாமையை மாற்றுவதும் ஆன தொடர் செயற்பாடுகளைச் செய்யத் தமிழ்ப் பெற்றோர்கள் கடமைப்பட்டுள்ளனர்.

இத்தகைய மாற்றங்கள் மூலம் உலகமெங்கும் சிறப்பாக ஈழத்தில் தமிழ்மொழியைக் காக்கவும் வளர்க்கவும் ஒன்றிணைந்து செயற்படுவோம் என உலகத் தாய்மொழித் தினமான இன்று உறுதி எடுப்போம்.

• • •

## வாக்குறுதியைக் ... தொடர்ச்சி...

நீக்க வேண்டும் என்று சொல்வதால், யார் இங்கு ஒற்றுமையைக் குழப்புகின்றார்கள்? அன்று விக்னேஸ்வரன் மட்டும் தான் தமிழ் மக்களின் தேசம் என்ற சொல்லை நீக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

எங்களைப் பொறுத்தவரையில் ஒற்றுமை என்பது கொள்கை அடிப்படையிலேயே இருக்கலாம். கூட்டமைப்பு மக்கள் மத்தியில் தங்கள் செல்வாக்கை இழந்து கொண்டு போகும் சமயத்தில், ஒரு மாற்று ஒன்றை மக்கள் தேடுகின்றார்கள். அந்த மாற்றாக கூட்டமைப்பை தோற்கடித்து நாங்கள் வரவேண்டும். கூட்டமைப்பு என்ன முடிவு எடுத்தாலும், நாங்கள் ஆட்சிக்கு வர வேண்டும் என்ற கோட்பாட்டுடன் நாங்கள் இறங்கத் தயாரில்லை.

இது தவிர எங்களுக்கு சம்பந்தனுடனும் சுமந்திரனுடனும் எங்களுக்கு எந்தவித தனிப்பட்ட பிரச்சினையும் கிடையாது. அவர்கள் எடுத்த கொள்கை முடிவு பிழை என்பதற்காகவே நாங்கள் வெளியேறுகின்றோம். விக்னேஸ்வரனும் அதே பிழையை செய்யும் போது, அவருடன் இணைய முடியாத ஒரு நிலைக்குத் தள்ளப்படுகின்றோம்.

விக்னேஸ்வரன் தனது கட்சியான ஈ.பி.ஆர.எல்.எப் கட்சியின் கீழ் கூட்டணி அமைத்த பிற்பாடு அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது, தான் தேர்தலின் பின்னர் கூட்டமைப்புடன் இணைந்து செயற்படத் தயார் என்று கூறியிருக்கின்றார். கூட்டமைப்புடன் இணைந்து பணியாற்றலாம் என்றால் ஏன் அவர்கள் பிரிந்து நிற்கிறார்கள். நீங்கள் பிரிந்து நிற்காவிட்டால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான் புதிய தலைமைத்துவத்தைக் கொடுக்கக்கூடிய ஒரேயொரு தரப்பாக இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிழையென நினைக்கும் மக்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கே சைக்கிள் சின்னத்திற்குத்தான் வாக்களிப்பர். அந்த வாக்கு வரக்கூடாது என்பதற்காக நீங்கள் கூட்டமைப்பிற்கு எதிரானவர்கள் எனக் காட்டி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி க்கு உண்மையில் ஒரு தலைமைத்துவத்தை ஏற்படுத்தக்கூடிய, புதிய அரசியலை செய்யக் கூடிய எங்கள் தரப்பு வாக்கு வங்கியை உடைப்பதற்காக மட்டுமே அவர்கள் செயற்படுகின்றார்கள் என்பதே உண்மை.

**கேள்வி:**

**அண்மைக்காலமாக ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியை நீங்கள் தொடர்ச்சியாக புறம் தள்ளிக் கொண்டிருப்பதற்கான காரணம் என்ன?**

**பதில்:**

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் போது, ஈ.பி.ஆர்.எல்.எவ், தமிழ் மக்கள் பேரவையின் உறுப்பினராக இருந்தும், அவர்களின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. வேறு கொள்கைகளை வலியுறுத்தியே ஈ.பி.ஆர்.எல்.எப் போட்டியிட்டது. அதுவும் உதயசூரியன் சின்னத்திலான ஆனந்தசங்கரியின் கட்சியுடன் போட்டியிட்டது. ஆனந்தசங்கரியின் வெளிப்படையான நிலைப்பாடே 13ஆம் திருத்தச் சட்டம் போதும் என்பதாகும். சங்கரியுடன் சேர்ந்து எப்படி சமஸ்டியைப் பற்றிப் பேச முடியும்?

எங்களுடன் சேராது, உதயசூரியன் சின்னத்திலான ஆனந்தசங்கரியின் கட்சியுடன் செல்ல விரும்பி, ஈ.பி.ஆர்.எல்.எப் உம் நாங்களும் கூட்டுச் சேரும் வாய்ப்பை இல்லாது செய்தது ஈ.பி.ஆர்.எல்.எப். தவிசாளர் பதவியைப் பெறுவதற்காக ஈ.பி.டி.பி. ஐ.தே.க. சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தது. அனைத்து சபைகளிலும் இந்த மூன்று கட்சிகளுடனும் சேர்ந்து தான் தவிசாளர் பதவியைப் பெற்றது.

அது பிழையென தமிழ் மக்கள் பெரியளவில் எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருக்கையில், ஈ.பி.ஆர்.எல்.எப். வவுனியா நகரசபையில் 3 உறுப்பினர்களை ஈ.பி.ஆர்.எல்.எப் வைத்திருந்தது. அந்த மூன்று உறுப்பினர்களையும் தவிசாளர் ஆக்குவதற்கு மேற்படி 3 கட்சிகளுடனும் கூட்டுச் சேர்ந்து தவிசாளர் பதவியை பெற்றுக் கொள்கின்றார்கள்.

வவுனியா வடக்கு நெடுங்கேணியில், மகிந்த ராஜபக்ஸவின் தாமரை மொட்டுச் சின்னத்தில் 5 சிங்கள வேட்பாளர்களுடன் இணைந்து இவர்கள் போருக்குப் பின்னர் நடைபெற்ற சட்டவிரேத குடியேற்றங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்டனர். கூட்டமைப்பிற்கு எதிராக போட்டியிட்டனர். கூட்டமைப்பு செய்தது பிழை என்றால், ஈ.பி.ஆர்.எல்.எப் செய்தது அதைவிட மோசம். கூட்டமைப்பு தாமரை மொட்டுச் சின்னத்துடன் சேரவில்லை.

நாங்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்து விட்டு அங்கீகாரம் கிடைத்த பின்னர் அதை தூக்கியெறிந்து செயற்பட மாட்டோம். நாங்கள் ஒன்றை சொல்கின்றோம் என்றால், செயலிலும் அதையே செய்வோம்.

• • •

## வடக்கு கிழக்கில் ... தொடர்ச்சி...

பின்னரும், கட்டளையிடு பதவிகளை வழங்கியமைக்கு, ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கிறார். இந்தப் பிரிவுகளின் விளக்கப்படி வடக்கு கிழக்கில் இராணுவமயமாக்கல் மக்களின் குடிமக்கள்சார் அரசாங்கத்தினைச் செயற்படவிடாது தடுத்து மக்களுடைய உள்ளக சுயநிர்ணய உரிமையான அவர்களுக்கான அமைதியான பாதுகாப்பையும் வளர்ச்சியையும் அவர்களால் வாக்களிப்பின் மூலம் தேர்வான அரசாங்கம் நிறைவேற்றாமல், மறுக்கிறது என்பது இத்தகைய நிலையில் இம்மக்கள் தங்களின் வெளியக சுயநிர்ணய உரிமையினைக் கொண்டு உலக நாடுகளையும் உலக மக்களையும் தமக்கு உதவும்படி கேட்கும் உரிமைக்கு ஈழத்தமிழ் மக்கள் உரிமையுள்ளவர்கள் என்பது தெளிவாகிறது.

அவ்வாறே அனைத்துலக மனித உரிமைகள் சட்டங்களையும், அனைத்துலக யுத்தகால மனிதாயச் சட்டங்களையும் மீறும் வகையில் வெளிப்படையாக அத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்கள் என ஐக்கியநாடுகள் சபையினால் பட்டியலிடப் பட்டவர்களுக்கு கட்டளையிடும் இராணுவத் தலைமைப் பதவிகளைக் கொடுப்பதன் மூலம் சிறிலங்கா இன அழிப்பு, மனிதாயத்திற்கு எதிரான குற்றங்கள், மனித உரிமைகள் வன்முறைப்படுத்தல்கள் என்பவற்றினை ஊக்கப்படுத்தும் அரசாக வெளிப்படுவதால் அது அனைத்துலக அளவில் சட்டரீதியான அரசு என்ற தகைமையை இழந்துள்ளது என்பது தெளிவாக வெளிப்படுகிறது.

இந்நிலையில் இத்தகைய பாதிப்புக்குள்ளான மக்களின் தன்னாட்சி உரிமையை உலக நாடுகளும் உலக அமைப்புக்களும் அங்கீகரிப்பதும், இத்தகைய மக்களை அதீத மனிதாய உதவி களுக்கு உரியவர்கள் எனக் கருதி அவர்கள் வாழும் நாட்டின் இறைமைக்கு அப்பால் இம் மக்களுக்கான நேரடியான மனிதாய உதவிகளை வழங்குவதுமே இத்தகைய மக்களைப் பாதுகாப்பதற்கான அனைத்துலக சட்ட முறைமையாக அமைகிறது.

# காற்றாலை மின் உற்பத்தியில்; வளர்ந்த நாடுகள் ஆர்வம்

பிரித்தானியாவில் 1.3 பில்லியன் டொலர்கள் செலவில் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் அமைக் கப்பட்வுள்ளது. கடற்கரையில் அமையவுள்ள இந்த மின்பண் ணை உலகில் மிகப் பெரும் மின் பண்ணையாக திகழும்.



'ஹன்சியா ஒன்று' என்ற இந்த மிகப் பெரும் திட்டம், அயர்லாந்து கடலில் உள்ள கடற் கரையில் அமையவுள்ளது.

வால்னி தீவுகளுக்கு அருகில் உள்ள கடற்கரையில் இருந்து 12 மைல்கள் தொலை வில் அமைக்கப்படவுள்ள இந்த ஆலையானது, ஒவ்வொ ன்றும் 623 அடிகள் உயரம் கொண்ட காற்றாலைகளை கொண்டது. 87 விசையாளிகளைக் கொண்ட இந்த பண்ணை 60,0000 வீடுகளுக்கு மின்சாரத்தை வழங்கப் போதுமானது. டென்மார்க் சக்தி நிறுவ னத்தினால் மேற்கொள்ளப்படும் இந்த திட்ட மானது, தற்போதுள்ள வால்னி மற்றும் வெஸ்ட் ஆஃப் டிடன் சான்ட் கடற்கரைக்கு அண்மையாக அமையவுள்ளது.


அதேசயம், பிரித்தானியாவின் கோர்ச்சீ எனப்படும் கடற்கரை மின்னாலை ஒன்றிற்கான கட்டுமானப் பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளது. யோர்க் பகுதியில் உள்ள கடற்கரையில் இருந்து 75 மைல்கள் தொலைவில் அமைக்கப்பட்டு வரும் இந்த காற்றாலை 174 விசையாளிகளைக் கொண்டதுடன், 1.2 கிகாவட்ற்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்ய வல்லது.

இதன் மூலம் ஒரு மில்லியன் வீடுகளுக்கு மின்சாரத்தை வழங்க முடியும். 157 சதுர மைல் கள் பரப்பளவு கொண்ட இந்த பண்ணை கோர்ன்சீ இரண்டு, முன்று மற்றும் நான்கு என தொடர வுள்ளது. இந்த திட்டத்தின் மொத்த செலவீனம் 8.7 பில்லியன் டொலர்களாகும்.

இதனிடையே, மாசற்ற எரிசக்திகளை அடைவதற்கு நெதர்லாந்தில் ஜெமினி காற்றாலை பார்க் நிறுவனம் 800,000 வீடுகளுக்கான மின்சார த்தை உற்பத்தி செய்யவுள்ளது. வட கடலின் கடற் கரையில் இருந்து 34 மைல்கள் தொலைவில் அமையவுள்ள இந்த காற்றாலை பண்ணையை கரையில் இருந்து பார்க்க முடியாது. 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த திட்டம் 2016 ஆம் ஆண்டு நிறைவடைந்தது. தற்போது 150 விசையாளிகள் மின்சாரத்தை உற்பத்தி செய் கின்றன. இதன் மொத்த செலவீனம் 3.1 பில்லியன் டொலர்கள்.

**விண்வெளியில் நிகழ்ந்து வரும் வளர்ச்சிகள்:**

150 பில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்பட்ட அனைத்துலக விண்வெளி நிலை யம் உலகின் விலையுயர்ந்த மிகப் பெரும் திட்ட ங்களில் ஒன்றின் இருப்பிடம். பூமியிலிருந்து சுமார் 186 மைல் தொலைவில், விண்வெளியில் இது சுற்றுகிறது. சர்வதேச விண்வெளி நிலையம் தான் (ஐ.எஸ்.எஸ்) பெரும்பாலும் கட்டப்பட்ட மிக விலையுயர்ந்த பொருளாக இருக்கின்றது. இது வெவ்வேறு மதிப்பீடுகளின்படி 100 பில்லியன் டொலர் முதல் 150 பில்லியன் டொலர் வரை செலவுகளைக் கொண்டது. 1998 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கு இடையில் கட்டப்பட்ட இந்த நிலையம் ஒரு மணி நேரத்திற்கு 17,500 மைல் வேகத்தில் ஒவ்வொரு 90 நிமிடங்களுக்கும் பூமியைச் சுற்றி வருகிறது.



9.7 பில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்பட்ட ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலை நோக்கியானது, நாசாவின் சமீபத்திய மிகப் பெரும் திட்டங்களில் ஒன்று. ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலை நோக்கி, ஒரு பெரிய அகச்சிவப்பு தொலை நோக்கியாகும். இது விண்



வெளியை துல்லியமாக கண்காணிக்க உதவும். இருப்பினும் இதில் இரண்டு பெரிய சிக்கல்கள் உள்ளன. முதலாவதாக இது 1996 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட 1 பில்லியன் டொலருக்கு மே லாக செலவீனம் சென்றுள்ளது. அதாவது ஒன்பது மடங்கிற்கும் அதிகமாக 9.7 பில்லியன் டொலராக சென்றுள்ளது.

இரண்டாவதாக, இது 14 ஆண்டுகள் தாமதமடை ந்துள்ளது. 2007இற்கு பதிலாக 2021ஆம் ஆண்டு இதன் வெளி யீட்டு தேதி எதிர்பார்க்கப்படு கிறது. இது பூமியிலிருந்து 1 மில்லியன் மைல் தொலைவில் பயணிக் கும் திறன் கொண்டது. எனவே மிகப்பெரும் ஆய்வுத் தகவல்களை சேகரிக்க வல்லது.

ஹப்பிள் விண்வெளி தொலை நோக்கியின் சாதனை இன்றும் தொடர்கின்றது.

ஜேம்ஸ் வெப்வின் வெளி தொலை நோக்கி வரு வதற்கு முன்பு 1990 ஆம் ஆண்டிலிரு ந்து பூமி யை குறைந்த சுற்றுப் பாதையில் சுற்றிவரும் ஹப்பிள் என்ற விண்வெளி தொலை நோக்கி 10 பில்லியன் டொலர் செலவானதாகும். நாசாவின் இந்த திட்டம் 1983 ஆம் ஆண்டில் ஆரம்பிக்க முன் மொழியப்பட்டது, ஆனால் அது நிதி சிக்கல்கள் மற்றும் 1986 இல் சேலஞ்சர் விண்வெளி விண் கலத்தின் அழிவு உள்ளிட்ட தடைகளை எதிர் கொண்டது. இப்போது 20 ஆண்டுகளாக செயற் பட்டு வரும் ஹப்பிள் பல அறிவியல் கண்டுபிடிப் புகளுக்கு இன்றியமையாதது. பிரபஞ்சத்தின் வயதையும் அது கண்டிறிந்தது.



**அந்தாட்டிக்காவில் அமைக்கப்பட்ட ஆய்வு மையம்**

அந்தாட்டிக்காவை விட பின்தங்கிய இட த்தை நீங்கள் காண முடியாது. 1992ஆம் ஆண்டில், தென் துருவத்தில் உள்ள வரலாற்று அமுண்ட் சென்-ஸ்காட் ஆராய்ச்சி நிலையத்திற்கு இந்த ஆய்வு மையத்தை மறுசீரமைப்பதற்கான அனு மதி அங்கீகரிக்கப்பட்டது. இதன் விளைவாக 1997 முதல் 174 மில்லியன் டொலர்கள் கட்டுமானத் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது. இன்றைய பணத்தில் இதன் கட்டுமான செலவுகள் 207 மில்லியனுக்கு சமம். இந்த ஆராய்ச்சி நிலையம் இரண்டு மாடிகளுடன், 80,000 சதுர அடி கொண்ட கட்டிடமாக மாற்றப்பட்டது. நிலையம் பனியில் புதைவதைத் தடுக்க நவீன தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட்டுள்ளது. 1957ஆம் ஆண்டில் தென் துருவத்தில் ஆண்கள் முதன் முதலில் குளிர் காலத்தை கழித்த 50 ஆண்டுகளுக்குப் பிறகு, 2008 ஆம் ஆண்டில் புதிய இணைக்கப்பட்ட வசதி அங்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

• • •